www.akaram.eu



# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.7 திருவள்ளுவர் ஆண்டு 2051

14.12.2019 - 13.01.2020

ISSN : 2195-6480

FREE Magazine





## தமிழீழம்

## சர்வதேச சட்டத்தினால் சாத்தியப்படுமா? சாப்பிடப்படுமா?

TKS BEST FOODS

# Merry Christmas

and

## HAPPY NEW YEAR

## நத்தார் சிறப்பு அதிரடி மலிவு விற்பனை

01.12.2019 முதல் 31.12.2019 வரை

உங்களால் நாங்கள்
உங்களைப் போலவே நாங்கள்!

**TKS Best Foods**

0049 231 950 468 83
0049 231 950 468 82

tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de

tksbestfoods

Rheinische Str. 79, 44137, Dortmund Germany

+ TREUE BONUS[2)]

ortel MOBILE



WORLD FLAT

+ **Unbegrenzte Minuten in 47 Länder**

+ **Deutschland Flat**

+ **Treuebonus: Ab dem zweiten Monat nur 19,99 €/28 Tage**

**24 99 €[1)] /28 Tage**

# OHNE PAUSE
# NACH HAUSE.




**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play · App Store

**Aufladbar mit:** ortel MOBILE · O2 · e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.




AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 - கார்த்திகை 2019 13 - மார்கழி 2020

சுவடி / ISSUE 8.7



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் புனித நத்தார் ஆங்கிலேயப் புது வருட நல் வாழ்த்துகளை தெரிவிப்பதில் அகரம் மகிழ்வடைகிறது.**

இலங்கையில் நடந்து முடிந்த ஆரிய, சிங்கள, பௌத்த குடியரசின் நிறைவேற்று ஜனாதிபதியாக கோட்ட பாயா ராஜபக்ஷ மிகப் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அவரது தெரிவு முழுக்க முழுக்க சிங்களப் பௌத்த மக்களால் ஆனது என்பதை, பொது பல சேனா என்கிற மதவன்முறை அமைப்பின் தலைமை பிக்கு வரவேற்று, இலங்கைக்கான சரியான சிங்களப் பௌத்த அரசு அமைந்து விட்டது எனக் கூறி, தமது பொது பல சேனா என்கிற அமைப்பை கலைத்து விட்டதாக அறிவித்தும் விட்டார்.

இதன் மூலம் இந்த அமைப்பை உருவாக்கி, இஸ்லாமியருக்கு எதிரான வன்முறைகளை தொடக்கியவர் கோட்ட பாயா என்கிற பரவலான செய்தி, உண்மை என்பது நிருபனமாகியது. ஐ.எஸ்.ஐ. என்கிற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பை இலங்கையில் உருவாக்கி, கத்தோலிக்கத் தமிழ் மக்களை உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளின் பொழுது தொடர் குண்டுத் தாக்குதல் மூலம் தமிழர் - இஸ்லாமிய உறவைச் சிதைத்துவருபவரும் இதே கோட்டபாயாதான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

இப்படி தமிழருக்கு எதிரான பகைமை மனம் கொண்ட ஜனாதிபதிகளில் தீவிரமானவர் தாமே! என்பதை தேர்தலை நோக்கியும், அதை வெல்வது பற்றியும் ஜே.ஆருக்கு மிஞ்சிய ஆளுமையை காட்டி விட்டார். இந்தத் தேர்தல் இலங்கையை முற்றிலுமான சிங்கள, பௌத்த நாடாக மாற்றிப் பதவியைப் பெற்றுள்ளார். ஆனால், தாம் அனைத்து மக்களின் ஜனாதிபதி எனக் கூறி, தம்மை ஒரு தர்மப் பிரபுவாக காட்டுவதை நாம் நம்பி ஏமாறமுடியாது. இதனை ஒரு சர்வாதிகாரியின் தர்மப் போதனையாகவே எடுக்க முடியும்.

தேர்தலில் எதிராக வேலை செய்தவர்கள், தமக்கு என்ன நடக்குமோ? என்ற பயத்தில் சிலர் நாட்டை விட்டே ஓடிவிட்டார்கள். பலர் வெள்ளை வான் அச்சத்தில் தவிக்கின்றனர். அப்படி ஓடியவர்களில் முக்கியமான புள்ளி, கோத்தாவின் கொலைவழக்குகளை விசாரணை நடத்திய பலுன்

விசாரணைப் பிரிவின் அதிகாரி. மேலும் கொழும்பு சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றிய இலங்கைப் பெண்மணியும் ஒருவர். மற்றொருவர் பற்றிய நிலை இன்னமும் தெரியாது.

இனிமேல் உள்நாட்டில் நீதி, நியாயம் சிறிதளவும் யாருக்கும் கிடைக்காது. இந்த நிலையில் சர்வதேச சித்திரவதைகளுக்கான நீதி கோரும் அமைப்பின் தலைவி யஸ்மின் சூக்கா இப்போதைக்கு கோட்டா சட்டப் பாதுகாப்பில் இருந்தாலும், அவர் பதவியை விட்டு விலகும் நாள் வரும். அப்பொழுது தப்ப முடியாது. அதுவரைஅவர் மீதான வழக்குகள் காத்திருக்கும் என்கிறார். வரலாற்றில் வழக்கைச் சந்திக்காமலே பலர் வாழ்ந்து, இறந்தும் போன கதைகளை வரலாறு கண்டுள்ளது.




எனவே, உலகத் தமிழினம் சர்வதேச சட்டங்களின் பிரகாரம், தனி நாட்டுக்கான சட்டப் போரை காலம் தாழ்த்தாமல் தொடங்க வேண்டும். கோட்டபாயா மிக ஆபத்தான சர்வாதிகாரியாக இலங்கையிலிருந்து தமிழினத்தை எல்லா வழிகளாலும் அழிக்கும் மனமும், திறனும் படைத்தவன்.

இன்று எமது நிலையை நோக்கி தமிழகத் தமிழரின் நிலை உருவாகும் ஆபத்துகள் அங்கும் அதிகரித்து விட்டன. நல்வாய்ப்பாக செந்தமிழன் சீமானின் அரசியல் எமக்கான தீர்வையும் பேசி, அரசியல் செய்வதால் எமது மேதகு தலைவர் வே.பிரபாகரனும், அவரது போராட்டமும் இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறது.

ஆனால், இதைப் பொறுக்க முடியாத ஈழ அரசியல்வாதிகளும், சிங்களத்தின் தமிழ் கைத்தடிகளும் சீமானோ, மற்றவரோ எமக்கான அரசியலை எப்படிப் பேசமுடியும் எனத் தமிழகத்தில், இந்திய மண்ணில் பேசும் கோமாளித்தனம் நடக்கிறது. அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பிரகிருதி யோகுஸ்வரன் சாமியார் மிக் கேவலமாக தமிழ் தேசியத்தையும், அங்கே தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் அமைப்புகளையும் சகட்ட மேனிக்குத் தாக்கிப் பேசியுள்ளார்.

இப்படியான நேர்மையற்ற தமிழ் அரசியல்வாதிகளாலும், கட்சிகளாலும் ஈழத் தமிழினம் தனது தாயகம், தேசியம், தன்னாட்சி, அதிகாரம் அனைத்தையும் சிங்கள, பௌத்த பேரினவாத அரசியலால் அழிக்கப்பட்டு விட்டது. சாமி வேடம் போடும் இவர்களுக்கு, இந்து மதம் பேசும் பா.ஜ.க. சொர்க்கமாகத் தெரியலாம். ஆனால், இந்தியா வட இந்தியரின் ஆரிய, சிங்கள உறவையும், அவர்களின் தமிழின வெறுப்பு அரசியலைத்தான் செய்கின்றன.

ஆரிய, திராவிட இனமோதல்தான் தமிழின அழிப்பாக மாறியது என்கிற உண்மை, இவரைப் போன்ற ஆசாமிகளுக்கும், கம்ப வாரிதிகளுக்கும் தெரியாமல் இருக்கிறதே! என்கிற கவலைதான் அகரம் இதழுக்கு.

மீண்டும் வரும் வரை நல்லவை நாடும்.

**ஆசிரியர்,** அகரம் குழுமம்

**உலகத் தமிழினத்துக்கு இருக்கும் ஒரே வழி, உலக நீதி மன்றத்தில் உலக சட்டவிதிகளுக்கு அமைவாக நீதி கோரி வெற்றி காண்பது ஒன்றுதான்.**

**த. எதிர்மன்னசிங்கம்**



# இவர்களில் தமிழ் மக்களின் எதிரி யார் ?



இந்த வித்தியாசத்தை கடந்த 1250 வருடங்களாக ஈழத் தமிழ் மக்கள் படித்தறியத் தவறிய காரணத்தால் கொடியும், முடியும், குடியும் கொண்டு ஆட்சி செய்தத் தமிழினம் இன்று, வேற்றின விரோதிகளின் காலடியில் அடிமைச் சேவகம் செய்து வாழும் அவல நிலையில் உள்ளது.

படிப்பு இருந்தது, பதவி இருந்தது, பணம் இருந்தது, பாராளும் திறமும் பாருக்குப் படைத்துக் காட்டியும் தமிழீழ விடுதலைப் புலிகள் புறநானூற்று வீரத்தை மீளமைத்துப் போயினர். அன்று போரில் புறமுதுகிட்டு ஓடியவனை, ஓட வைத்தவன் இன்று கட்டி அனைத்து மகிழும் பேடியாக தானும் மண்டியிட்டு,

தமிழ் இனமும் மண்டியிட வைத்தவனின் துரோக வரலாறு இன்று எம்முன் சிரிக்கிறது.

உடன் பிறந்தே கொல்லும் வியாதி போல, ஈழத் தமிழினத்தின் உடன் பிறப்புகளின் இழி குணமாக உள்ள காட்டிக் கொடுப்புகளாலும், தமிழினம் மிகப் பெரும் அழிவைச் சந்தித்து வருகிறது. கடந்த 100 ஆண்டு கால இனத் துரோகிகளின் காட்டிக் கொடுப்பு அரசியலால் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரங்கள், வாழ் நிலங்கள் பறிக்கப்பட்டு இன்று வாக்குரிமை இருந்த போதிலும், அவற்றின் பெறுமதி பேரினவாத அரசியலால் சிதைக்கப்பட்டு, தமிழினம் செல்லாக்காசாக மாற்றம் கண்ட அதிசயத்தை, நடந்து முடிந்த அரச அதிபர் தேர்தல் முடிவுகள் உலகுக்குச் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் தெரிவித்து விட்டன.

தமிழர் நிலமெங்கும் புத்த கோயில்களும், சிங்களவர் குடியேற்றங்களும், சிங்கள மொழித் திணிப்பும் சட்டப்படியாக இடம் பெற்றுவருவதும், தமிழர் கோயில்களும், கல்வி நிலையங்களும் சிங்களவர் ஆதிக்கத்துள் அடக்கப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. எங்கள் போலி அரசியல்வாதிகளின் பதவி, பண ஆசைகள் தமிழ் மக்களின் அழிவுக்கே வழி சமைப்பதையும் கடந்த கால அரசியல் அனுபவம் தந்துள்ளன.

யாழ் மண்ணையம், மக்களையும் அவர்களின் அவலங்களையும் அறியாத வெள்ளைக்கார தமிழ் துரைமார்கள், தமிழர் தேவைகளைத் தெரிந்துத் தீர்வுகளைத் தருவர்



என்கிற ஏமாளித் தனம், சிங்களத்தின் ஏமாற்று அரசியலுக்குப் பெரிதும் உதவி வந்துள்ளதை பொன். இராமநாதன் முதல், இன்றைய மரியாம்பிள்ளை,அபிரகாம், சுமந்திரன் வரை காண முடிகிறது.

பொன்.இராமநாதன் தன்னை ஒரு சைவப் பழமாக ஆறுமுகநாவலருக்கு காண்பித்து, அவரது ஆதரவால் மக்களின் பிரதி நிதியாகத் தெரிவாகி, சிங்கள இனவெறி அரசியலின் பிதாமகனான அநகாரிக தர்மபாலாவின் சொல்லை நம்பி, அப்பாவிகளான தமிழ் இஸ்லாமியருக்கு எதிராகவும், இனவெறிச் சிங்களத் தலைவர்களைக் காப்பாற்றியும், தமிழ்






இராமநாதன்




Anagarika on a 2014 stamp of India



சுந்தரலிங்கம்

மக்களுக்கு எதிரான அரசியலை இலங்கையில் தொடக்கி வைத்தார்.

இவர்போல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்ரீமாவோவின் நியமன உறுப்பினர்களாகப் பதவி பெற்று, பாராளுமன்றம் புகுந்த எம்.சி.சுப்பிரமணியம்

பின்கதவால் நியமனம் பெற்று, இன்று தமிழ் மக்களின் முதுகின்மேல் சிங்கள இனவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் பதவியோடு சவாரி செய்ய முடியுமாகில், தமிழினம் எத்தனை சுலபமாக மோசடி அரசியலால் பழி வாங்கப் படுகிறது என்பதை ஊகிக்க முடியும்.

திரு.கோட்ட பாயா ராஜ பக்ஷவின் தேர்தல் வெற்றியை அகரம் தொடர்ந்தே எதிர்வு கூறி வந்துள்ளது. ஆயினும் த.தே.கூ, தனது தான்தோன்றித்தனமான எதேச்சாதிகார செயற்பாடுகளால் தமிழினத்தின் மரண சாசனத்தை தொடர்ச்சியாக 1948, 1972, 1982 என அரசின் அமைப்பு சட்டங்களின் மூலம் உறுதிப்படுத்தியே வந்துள்ளது.

ஆனால், ஈழத் தமிழ் மக்களின் கூட்டமைப்பின் மரமண்டைகளில் மட்டும் கடந்த 73 வருட படிப்பினைகள் எதுவும் ஏறமட்டும் மறுப்பதோடு, தாமும் எதிரிகளுடன் இணைந்து, வாக்களித்த மக்களுக்கே துரோகம் செய்துவிட்டு, "ஐயோ ஏமாற்றி விட்டார்களே!" என்று பொய் பேசி, மீண்டும் வாக்குப் பெற்று, பதவி சுகத்தை அனுபவிக்கிறார்கள்.

1972, 1982 அரசமைப்புச் சட்டங்கள் 1948 அரசமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணாக, சட்ட விரோதமாக தமிழ் மக்களை ஏமாற்ற, பின் கதவு வழியாக நியமன உறுப்பினர் பதவி கொடுத்து, தமிழ் மக்களின் ஆதரவைக் கபடத்தனமாகப் பெற்று நிறைவேற்றியதால் சிங்கள மொழிக்கும், புத்த மதத்துக்கும் இன்று தமிழ் மக்கள் கட்டப்படும் நிலை உருவானது.

இப்படித்தான் ஸ்ரீமாவோ 1970ல் எம்.சி.சுப்பிரமணியத்தையும்,





NEW ARRIVAL
Merry Christmas
AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
இனிய
கிறிஸ்துமஸ்
நல்வாழ்த்துகள்
StaR-Impex
www.star-impex.de




குமாரசூரியரையும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறாமலே நியமன உறுப்பினர் பதவி வழங்கி, 1972 அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றினார். இன்றும் அதே அரசமைப்புச் சட்ட விதிகளினால் தமிழினம் மாகாண அரசைக் கூடப் பெற முடியாத நிலையில் கட்டுண்டு கிடக்கிறது.

1972 அரசமைப்புச் சட்டம் சட்டப்படி செல்லாது எனச் சட்டம் படித்த செல்வா போன்ற மேதைகள் கூட முன்வரவில்லை. வழக்குத் தொடுத்த சந்தரலிங்கம் கூட வழக்கைத் தொடராமல், பின்வாங்கிய மர்மம் ஏன்? என்பது இதுவரை வெளிவராத மர்மம் என்றே சொல்ல வேண்டும்.

ஈழத் தமிழின அழிப்புப் போரை நடத்திய இவர்களும், நடத்திய இந்திய அரசும் 2014ல் சிங்களத்தின் வன்முறை தமிழ் இன அழிப்பு அரசியலுக்கு ஆசானான அநகாரிக தர்மபாலாவின் நினைவு முத்திரையை, இன்றைய பா.ஜ.க. அரசு வெளியிட்டதன் மர்மம் இந்தியா சிங்களத்தின் ஆரிய இன மேலாதிக்க வெறியின் மூலம் என்பதுதானே பொருள். இந்நிலையில் நடந்து ஆரிய திராவிடப் போர் நடத்தியவர்கள் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட உலக ஆரிய அரசுகள், துணை போன அனைவரும் தமிழினத் துரோகிகளே!.

இன்று ஜனாதிபதி கேட்டபாயா இலங்கையின் சிங்கள ஆரியச் சக்கரவர்த்தியாக, உலக ஆரிய அரசுகள் அங்கீகரித்து விட்டன. இந்தியாவின் சூத்திரதாரியாக இந்தப் போரை நடத்திய ஆரிய பிராமணன் சுப்பிரமணியன் சுவாமி எழுதிய புத்தகத்தில், “சிங்களவர்கள் இந்திய வடமாநிலங்களில் சென்று குடியேறிய ஆரிய வம்சாவழியினர். அதனால் என்றும் இந்தியா சிங்களவரையே ஆதரிக்கும்” என எழுதியுள்ளதாக அண்மையில் திருச்சி வேலுச்சாமி ஒரு காணொளிப் பதிவில் கூறியுள்ளார். அதன் கண்ணி இதோ.

“உலகத் தமிழினத்துக்கு இருக்கும் ஒரே வழி, உலக நீதி மன்றத்தில் உலக சட்டவிதிகளுக்கு அமைவாக நீதி கோரி, வெற்றி காண்பது ஒன்றுதான். அத்தகைய சாதனையை எத்தனை விரைவாகச் செய்ய வேண்டும் என்பதையே கோத்தபாயாவின் அமோக வெற்றி எச்சரிக்கிறது.

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

---

உயர்தர புடவைகள்
மற்றும் துணி வகைகள்
வாங்க சிறந்த இடம்

இனிய கிறிஸ்துமஸ்
நல்வாழ்த்துகள்

Rani palace



044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland

GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45    058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch   076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

**வருமானக்காப்புறுதி**
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

**சேமிப்புக்காப்புறுதி**
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

**ஆயுட்காப்புறுதி**
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

**வாகனக்காப்புறுதி**
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

**வீட்டுக்காப்புறுதி**
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

**சட்டக்காப்புறுதி**
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

**மருத்துவக்காப்புறுதி**
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

**வீட்டுக்கடன்**
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்


மிராண்டா சுறொய்சு

# அணுக்கழிவால் யேர்மனிக்குத் திடுநேர்கை உண்டாகுமா?

மனிதன் அணுவின் தொழிற்பாட்டைக் கண்டுபிடித்த நாளிலிருந்து தனக்குத் தானே உலைவைத்துக் கொண்டான். உலகம் முழுவதும் அணுமின் நிலையங்களை மூடிவருகின்ற போதிலும், அணுக்கழிவை எங்கே சேமிப்பது? என்பதுவே மிகப் பெரிய சவால். அந்த சவாலிற்கு முகம் கொடுத்திருக்கிறது யேர்மனி.

யேர்மனி தனது அனைத்து அணு மின் நிலையங்களையும் மூடி வருகிறது. இன்றும் செயற்பட்டு வரும் ஏழு மின் நிலையங்கள் 2022-க்குள் மூடப்பட உள்ளன. அதனால் 1மில்லியன் ஆண்டுகளுக்கு அணுக் கழிவுகளைப் பாதுகாப்பாக வைக்க ஒரு இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது யேர்மனி.

இப்போது உயர் மட்ட கதிரியக்கக் கழிவுகள் தற்காலிக வசதிகளில் மட்டுமே சேமிக்கப்படுகின்றன. அதுவும் அணு மின்நிலையத்திற்கு அருகில்தான். அவை, சில ஆண்டுகளுக்கு மட்டுமே கழிவுகளை வைத்திருக்க மட்டுமே வடிவமைக்கப் பட்டுள்ளன. யேர்மனி முழுவதும் இந்த தற்காலிகச் சேமிப்புத் தளங்கள் ஏராளக் கணக்கில் இருக்கின்றன.

உலக விஞ்ஞானிகளைக் குறி வைத்திருக்கும் ஒரு மிகப்பெரிய கேள்வியும் 1மில்லியன் ஆண்டுகளுக்கு அக்கழிவுகளைப் பாதுகாப்பாக வைக்க முடியுமா? என்பதுதான். வழக்கமாக அவர்கள்








சொல்வது பூமியின் ஆழத்தில் புதைத்துவிடலாம் என்பதுதான். ஆனால், கதிரியக்கம் வெளியிடும் அணுக் கழிவைப் பூமியின் ஆழத்தில் புதைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல!.

"இனி வரும் ஆண்டுகளில் யேர்மனி தனது அணு மின் நிலையங்கள் அனைத்தையும் மூடுவதால் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சனை இது" என்கிறார், சேமிப்பு தளத்தைத் தேடும் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் மிரண்டாசுறொய்சு *(Miranda Schreurs).*



2011ஆம் ஆண்டு புகுசிமாமா பேரழிவைத் தொடர்ந்து முடிவு செய்யப்பட்டபடி, இரண்டு ஆண்டுகளில் நாட்டின் அனைத்து அணுசக்தி நிலையங்களும் மூடப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் 28,000 கன மீற்றருக்கும் அதிகமான கதிரியக்கக் கழிவுகளுக்கு, யேர்மனி ஒரு மயானத்தைத் தேடுகிறது. ஒரு சிறப்பு நிபுணர் குழு சுமார் 2,000 கொள்கலன்களை ஆபத்தான உயர் மட்ட கதிரியக்கக் கழிவுகளுடன் புதைக்க ஒரு இடத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஆனால், தேடுதலில் பல சவால்களை அது எதிர்கொள்கிறது. பொருளாதார விவகாரங்கள் மற்றும் எரிசக்தி அமைச்சகம், ஒரு மில்லியன் வருட காலத்திற்குச் சிறந்த பாதுகாப்பையும் வழங்கும் ஒரு இடத்தைக் கண்டு பிடிப்பதற்கான காலக்கெடு 2031-ஆக நிர்ணயித்துள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள, பேராசிரியர் மிராண்டா சுறொய்சு, "தற்காலிக வசதிகளில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் கம்பிகளைக் கொண்டு

செல்வது என்பது ஒரு சவாலான செயலாகும். அந்த எரிபொருள் கம்பிகளின் ஒரு கொள்கலனைத் திறந்தால்கூட, மனிதர்கள் உடனடியாக இறந்து விடுவார்கள். அவை நம்பமுடியாத அளவிற்குச் சூடாக இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வது மிகவும் கடினம்.

இதுபோக கழிவுகளை வைக்கும் நிரந்தர இடத்திற்குப் பல காரணிகள் சாதகமாக இருக்க வேண்டும். ஆனால் யேர்மனியில் பல இடங்கள் கழிவுகளை வைக்க போதுமான தகவமைப்பைக் கொண்டிருக்கவில்லை. பாதுகாப்பான தளம் குறைந்தபட்சம் நிலத்தடிக்குக் கீழே ஒரு கிலோமீற்றர் ஆழம் இருக்க வேண்டும். புவியியல் ரீதியாக மிகவும் நிலையான இடமாகவும் இருக்க வேண்டும். இது பூகம்பங்களைத் தாங்கும் பகுதிகளாகவும் இருக்க வேண்டும். எந்த நீரோட்டமும் அந்த பகுதிக்கு அருகில் இருக்கக் கூடாது.

எதிர்கால மனிதர்களுக்கு அதன் இருப்பைத் தெரிவிப்பது கூட மிகப்பெரிய சிக்கலையே தரும். மொழியைப் புரியாதவர்கள் அதைக் கையாளும்போது நிச்சயமாகக் கேடுகளை விளைவிக்கும்.



ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழித்து வரும் எதிர்கால தலைமுறையினருக்கு இப்போது சொல்வது எப்படிப் புரியும்... ? மொழி முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். அவர்களுக்குப் புரியும்படி தளத்தை எப்படிப் பாதுகாப்பது? என்பது குறித்து தகவல் தொடர்பு வல்லுநர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அதேபோல தகவல்தொடர்பிலும் சிக்கல் இருக்கிறது. ஏனெனில் அதிகாரிகள் தளத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உள்ளூர் மக்களுடன் ஒரு



உடன்பாட்டை எட்ட வேண்டும். எடுத்துக்காட்டாக, முன்னாள் மேற்கு யேர்மனியில் அமைந்துள்ள சாக்சன் என்ற கொல்பென் கிராமத்தில் வசிப்பவர்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் கதிரியக்கக் கழிவு தளத்தை அங்கு அமைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்து வருகிறார்கள். இங்கே உள்ள தற்காலிக வசதிக்குச் செல்லும் எரிபொருளின் கொள்கலன்களை ஏற்றிய தொடருந்துகளைக் கூட அம்மக்கள் தடுத்து வருகிறார்கள். அதனால் இப்போதைக்கு யாரும் தங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் அணு குப்பைக் கிடங்கு அமைவதை விரும்ப வில்லை.

எதிர்வரும் ஆண்டு யேர்மனியில் அணுக் கழிவுகளை சேமிக்கக்கூடிய இடங்களை அடையாளம் காண முடியும் என்று தேடும் குழு நம்புகிறது (கழிவுகளை ஏற்றுமதி செய்ய எங்களிடம் எந்த திட்டமும் இல்லை). இது எங்கள் வாழ்நாளைத் தாண்டி நீண்டுள்ள ஒரு செயல். 2130 மற்றும் 2170 ஆண்டுகளுக்கு இடையில் நிரந்தர சேமிப்பு வசதி இறுதியாக மூடப்படும். உலகெங்கிலும் 400-க்கும் மேற்பட்ட அணு மின் நிலையங்கள் உள்ளன. பல அவற்றின் இயக்க வாழ்நாளின் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. கழிவு சேமிப்பு பிரச்னை இன்னும் தீவிரமாக மாறும்” என்கிறார், மிராண்டா சுஹொய்சு.

கிழக்கு யேர்மனியின் கிடைமீஹ் மற்றும் *Moersleben* ஆகிய இடங்களிலுள்ள முன்னாள் உப்புச் சுரங்கங்கள், 1960 மற்றும் 1970-களில் குறைந்த மற்றும் நடுத்தர அளவிலான அணுக் கழிவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. அந்த கழிவுகளால் சுற்றியுள்ள மக்கள் இன்னும் அச்சத்தில்தான் வாழ்ந்து வருகிறார்கள். இப்போது புதிதாக மூடவுள்ள அணு மின் நிலைய கழிவுகளை எங்கு வைக்க வேண்டும்? என்பது யேர்மனிக்குச் சவாலாகவே உள்ளது.

**- துரை**



# IMPORTAS
Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
“இம்போட்தாஸ்” நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

இனிய கிறிஸ்துமஸ்
நல்வாழ்த்துகள்

Kranichweg 8, 3074
Muri Bei Bern
☎ 031 951 24 44

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55  Fax : +41 43 343 03 56
email : info@importas.ch   Web : www.importas.ch

# Jaffna Stores

Geschäftsführer : Herr Thayaharan Nadarajah

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்







மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.com

இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்



# என்ன செய்யப் போகின்றது இந்தியா?

சண் தவராஜா



பெரும்பாலான ஈழத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக - நடந்து முடிந்த அரசுத் தலைவர் தேர்தலில் - கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்றமை அதிர்ச்சிதரும் செய்தியாக இருந்த போதிலும், இந்திய அரசாங்கம் மேற்கொண்ட ஒருசில முயற்சிகள் அவர்களுக்குத் தெம்பூட்டுவதாக அமைந்திருக்கின்றன. அரசுத் தலைவர் தேர்தலில் யார் வெற்றி பெற்றார்? எனும் செய்தி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட முன்னரேயே, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் சிறிலங்கா விஜயம் இடம் பெற்றது.

நவம்பர் 17ஆம் திகதி அதிகாலை மூன்று மணிக்கே அவர் கொழும்பில் நின்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய அரசுத் தலைவருக்கு இந்திய அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்த வெளியுறவு அமைச்சர், இந்தியாவிற்கு வருகை தருமாறு உத்தியோகப் பூர்வ அழைப்பிதழையும் கையளித்துச் சென்றார்.

அதேவேளை, சிறிலங்கா அரசுத் தலைவர் தேர்தல் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட இந்திய அரசாங்கம் 'தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையிலான செயற்பாடுகளைப் புதிய அரசுத் தலைவர் முன்னெடுக்க வேண்டும்' எனவும் கோரியிருந்தது.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பையேற்று புதுடில்லி சென்ற கோத்தாபய அவர்களுக்குச் செங்கம்பள



வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன், தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் அணிவகுத்து நின்று, அவரை வரவேற்ற காட்சிகள், இலங்கையுடனான நல்லுறவிற்கு எத்துணை முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது என்பதற்கான சாட்சியாகவும் விளங்கியது.

கோத்தாபய அவர்களின் இந்திய விஜயத்தை ஒட்டி நிகழ்ந்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் போதும் 'தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது' தொடர்பாக மீண்டும் வலியுறுத்தப் பட்டிருந்தது. தனக்கான விருந்தோம்பலுக்குப் பதிலளித்து உரையாற்றும் வேளையில், 'தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுதல்' எனும் அம்சம் தொடர்பில் எதுவித கருத்துகளையும் தெரிவித்து இருக்காத கோத்தாபய, இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் "13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த முடியாது எனவும், குறிப்பாக காவல்துறை அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்க முடியாது" எனவும் தெரிவித்து இருந்தார்.

இந்தியாவில் நின்று கொண்டு, இந்திய அரசாங்கம் அடுத்தடுத்து இரு தடவைகள் கூறிய விடயங்களுக்கு மாறாக - அதிலும் பரஸ்பர பேச்சுக்களின் போதான இந்திய அரசாங்கத்தின் 'நாடியைப் பார்த்து' அறிந்த பின்னரும் - கருத்துத் தெரிவித்தமையானது நோக்கர்களின் புருவங்களை உயரச் செய்திருக்கின்றது. இதனை எவ்வாறு புரிந்து கொள்வது? என்பது தொடர்பில் தமிழ் மக்களும் குழம்பிப் போய் உள்ளனர்.

தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பில் இந்தியா பிரஸ்தாபிப்பது வெறுமனே கண்துடைப்பு நாடகம்தானா?

இரண்டாவது தடவையாகத் தலைமை அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட மோடி, அண்மைக் காலமாக தமிழ் மொழியின் மீதும், தமிழ் நாட்டின் மீதும் தீராத காதலை வெளிப்படுத்தி வருகிறார். அதன் ஒரு அங்கமாகவே, ஈழத் தமிழர் மீது அக்கறை இருப்பது போன்று நடந்து கொள்கிறாரா? எனும் சந்தேகம் எழுப்பப் படுகின்றது.

மறுபுறம், உண்மையிலேயே தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பில் மனதார அக்கறை கொண்டு இந்தியா செயற்பட முனைகிறது என வைத்துக் கொண்டால், தனது கோரிக்கையை அலட்சியம் செய்யும் கோத்தாபய தொடர்பில் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கும்? என்ற கேள்வி எழுகிறது.


GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607
இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்




சிறிலங்காவில் நடைபெற்ற அரசுத் தலைவர் தேர்தலை ஒட்டி ஆய்வுகளை மேற்கொண்ட பலரும், பிரதான வேட்பாளர்களுள் ஒருவரான சஜித் பிரேமதாஸ இந்திய மற்றும் அமெரிக்க அரசாங்கங்களின் ஆதரவு பெற்றவர் எனவும், கோத்தாபய ராஜபக்ச சீன அரசாங்கத்தின் ஆதரவு பெற்றவர் எனவும் குறிப்பிட்டிருந்தனர். 'எதிர்பாராத விதமாக' கோத்தாபய வெற்றி பெற்றதும், சீனாவின் கை ஓங்கி விடுமோ? என்ற அச்சத்திலேயே இந்திய வெளியுறவு அமைச்சர் அவசர, அவசரமாகக் கொழும்பு சென்றார் எனக் கூறப்படுகின்றது. சீனாவின் செல்வாக்கில் இருந்து கொழும்பை 'விடுவிப்பதற்கான' ஒரு ஆயுதமாகவே தமிழர் விவகாரத்தை புது டில்லி உயர்த்திப் பிடிக்கின்றது என ஒரு சாரார் கருதுகின்றனர்.

இத்தகைய கருத்தைக் கொண்டிருப்பவர்கள் வேறொரு விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றனர். ''தேர்தல் பரப்புரைகள் நடைபெற்ற சமயத்தில், புது டில்லியில் இருந்து தொடர்பு கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு கோத்தாபய தரப்பில் இருந்து உரிய எதிர்வினை இருக்கவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர். 'சஜித் வெற்றி பெறுவார் என்னும் நம்பிக்கையினால்' அது பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளமல் இருந்த இந்தியா, தேர்தல் முடிவுகள் எதிர்பாராத விதமாக அமைந்தமையினால், 'சீனாவின் செல்வாக்கு வளையத்தில் சிக்கிவிடாது' கோத்தாபயவைக் காப்பாற்றும் நோக்கிலேயே வெளியுறவு அமைச்சரை உடனடியாகக் கொழும்பு அனுப்பி வைத்தது'' என்கின்றனர்.

இந்தத் தகவல்கள் உண்மையாக இருந்தால் 'தமிழர் விவகாரத்தை' கோத்தாபயவை 'வழிக்குக் கொண்டு வரும்' ஒரு கருவியாகவே இந்தியா பாவிக்க முனைகின்றது என்ற முடிவிற்கு வரலாம். அது மட்டுமன்றி, தற்போதைய நிலையில் இந்திய அரசாங்கத்தில் ஈழத் தமிழர் நலனுக்காக அழுத்தம் தரக் கூடிய சக்திகளும் இல்லை என்பதுவும் உண்மையே!.

கோத்தாபயவைப் பொறுத்தவரை அவர் இந்தியாவையோ, சீனாவையோ பகைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இதனை அவர் வெளிப்படையாகவே தெரிவித்தும் உள்ளார். ''சிறிலங்காவின் தனித்துவத்தை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவரின் இத்தகைய அணுகுமுறை இந்தியாவின் எதிர்பார்ப்பை ஈடு செய்வதாக இருக்குமா? என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு இந்தியாவின் எதிர்பார்ப்பை கோத்தாபய ஈடுசெய்யத் தவறும் பட்சத்தில், இந்தியாவின் அணுகுமுறை என்னவாக இருக்க முடியும்? என்ற கேள்வி எழுகிறது.

கோத்தாபயவைப் பொறுத்தவரை அவர் அரசுத் தலைவராக இருந்தாலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு அற்றவராக இருக்கிறார். தனது நிறைவேற்றும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு, நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்குச் செல்வதற்குக் கூட அவர் ஒருசில மாதங்கள் காத்திருக்க வேண்டி இருக்கிறது. அதேவேளை, நடைபெறப் போகும் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை வெற்றியைப் பெறுவதற்குக் கடின உழைப்பை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது.

மறுபுறம், தேர்தல் தோல்வியோடு துவண்டு போய்விடும் என எதிர்பார்க்கப் பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, சஜித் பிராமதாஸ தலைமையில் மீண்டும் ஒரு வலுவான சக்தியாக மாறி, பொதுஜன பெரமுன கட்சிக்குப் பலத்த சவாலாக அமையக் கூடிய ஏதுநிலைகள் தென்படத் தொடங்கியுள்ளன.

ராஜபக்ச சகோதரர்களைப் பொறுத்தவரை நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிட்டினால் என்னவெல்லாம் செய்வார்கள்? என்பதை ஏற்கனவே ஒரு தடவை பார்த்திருக்கிறோம். எனவே, எப்பாடு பட்டாவது எதிர்கட்சிகள் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியாக வேண்டும் என்ற சிந்தனையோடு ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் வியூகங்களை வளர்த்து வருகின்றன.

சிறிலங்காவைப் பொறுத்தவரை தேர்தல் காய்ச்சல், அரசுத் தலைவர் தேர்தலோடு முடிந்து விடவில்லை. பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் எனத் தொடரவே போகின்றது.

இந்தத் தேர்தல்களைக் காரணம் காட்டி, இந்தியாவின் நெருக்குவாரங்களில் இருந்து கோத்தாபய தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால், அது நிரந்தரமானதாக அமையுமா?




வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்



தேவன்

# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

முதலாம் உலகப்போருக்கு உலகம் வெளிப்படையாக சொல்லிக் கொள்ளும் காரணம் "ஆஸ்திரியா நாட்டுப் பட்டத்து இளவரசரான பிரான்சிஸ் பெர்டினாண்டும், அவருடைய மனைவியும் காரில் சென்ற போது (1914 ஜுன் 28) சுட்டுக் கொல்லப் பட்டது, போர் தொடங்குவதற்கான உடனடிக் காரணம் ஆயிற்று எனவும், சுட்டவன், காவ்ரீலோ பிரின்சிப், செர்பியா நாட்டைச் சேர்ந்தவன். இதன் காரணமாகப் பழிவாங்கும் நோக்குடன், செர்பிய இராச்சியத்தின் மீது ஆஸ்திரியா படையெடுத்தது" எனவும் சொல்வார்கள். ஆனால், அது உண்மையான காரணம் அல்ல.

உண்மையான காரணம், ஆஸ்த்திரிய-ஹங்கேரி மக்களுக்கும், சேர்பியர்களுக்கும் இருந்த இனப்பகையே ஆகும். பால்க்கன் பகுதிகளில் ஆஸ்திரியா-ஹங்கேரியின் செல்வாக்குக் குறைந்து, பரந்த-சிலேவியா இயக்கம் வளர்ச்சி பெற்றுவந்ததால், ஆஸ்திரியா-ஹங்கேரிக்கும், சேர்பியாவுக்கும் இடையிலான போர் தவிர்க்க முடியாததெனவே கருதப்பட்டது. ஆஸ்திரிய எதிர்ப்பு உணர்வு அதிகமாகக் காணப்பட்ட சேர்பியாவின் வளர்ச்சியுடன், இனவழித் தேசியம் பொருந்தி வந்தது.

ஆஸ்திரியா-ஹங்கேரி, முன்னைய ஒட்டோமான் பேரரசின் மாகாணமாக

இருந்ததும், சேர்பியர்கள் அதிகம் வாழ்ந்து வந்ததுமான பொஸ்னியா-ஹெர்சகொவினாவை 1878ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டது. 1908ஆம் ஆண்டில் இது முறையாக ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் இணைக்கப்பட்டது. அதிகரித்து வந்த இன உணர்வுகளின் வளர்ச்சி, ஒட்டோமான் பேரரசின் வீழ்ச்சியுடனும் பொருந்தி வந்தது.

இன மற்றும் மதப் பிணைப்புக்கள் காரணமாகவும், கிரீமியப் போர்க் காலத்திலிருந்து ஆஸ்திரியாவுடன் இருந்து வந்த போட்டி காரணமாகவும், ரஷ்யா பரந்த-சேர்பியா இயக்கத்துக்கு ஆதரவாக இருந்தது. தோல்வியடைந்த ரஷ்ய-ஆஸ்திரிய ஒப்பந்தம், நூற்றாண்டுகளாக பால்க்கன் பகுதித் துறைமுகங்கள் மீது ரஷ்யாவுக்கு இருந்த ஆர்வம் என்பனவும் இதற்கான காரணங்களாக இருந்தன.

இரண்டாம் உலகப்போருக்கு எத்தனையோ காரணங்கள் சொல்லப் பட்டிருந்தாலும், பிராஞ்சின் எத்தியோப்பிய காலணி ஆதிக்க நடவடிக்கைகள் என்பதை முன்னிறுத்தி இருந்தாலும், ஹிட்லர் வெர்சாய் மற்றும் லோகர்னோ உடன்படிக்கையை மீறி இருந்தாலும், இரண்டாம் உலகப்போருக்கு முக்கிய காரணம். முதல் உலகப்போருக்கு பிந்தைய நாட்களில் ஐரோப்பிய கண்டத்தில் நிலவிய இனப் பாகுபாட்டுடன் கூடிய காலணி ஆதிக்க அரசியலே முக்கிய காரணமாகும். சரி நாம் இந்தியாவிற்கு வருவோம்...

ஆங்கிலேயர்கள் இந்த நிலப்பகுதிக்கு வருவதற்கு முன், வந்த பிறகும் இப்போது இருக்கும் இந்தியா என்ற நாடு இருந்ததா? என்ற கேள்விக்கு, இல்லை! என்பதே எல்லோருக்கும் தெரிந்த பதில். வட இந்தியாவை எடுத்துக் கொண்டால், அதன் 1,800 ஆண்டு வரலாற்றில், ஒரே பகுதியாக இருந்ததாக வரலாறு கிடையாது. மவுரியர், கனிஷ்கர், குப்தர், அர்ஷவர்த்தனர், சுல்தான்கள், பல்வேறு



# Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

**சுவிசில் சொந்த வீடு வாங்க**
**விரும்பும் உறவுகளே!**

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்


**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch


Cicero Member ID 15787
www.cicero.ch

**So fängt Zukunft an.**



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

தனித்தனி நிலப் பகுதிகளில், தனித்தனி ஆட்சிகளே நடந்தன. ஒரே குடையின் கீழ் பெரும் நிலப்பகுதி கொண்டு வரப்பட்டபோது கூட, தன்னாட்சிகளை அழித்து விடவில்லை. தெற்கு பகுதியை பொறுத்தவரை சேர, சோழ, பாண்டியர்களும் மற்றைய குறுநில மன்னர்களும் வியாபித்து இருந்தது நமது வரலாற்றில் கிடைக்கும் உண்மை தகவலாகும்.

14ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகீசியர்கள், 16 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள், 16 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் என மொத்த இந்தியாவிலும் வியாபித்து இருந்தவர்கள் ஐரோப்பியர்களே!. உண்மையில் இந்த ஐரோப்பியர்கள் அனைவரும் ஒரே மதத்தினர். இவர்கள் வியாபார நோக்கில் மட்டுமே இங்கே இருந்தார்கள் என்றெல்லாம் மேலோட்டமாக நாம் இதை கடந்துவிடக் கூடாது. அப்படி கடந்தால் அது சரியாகவும் இருக்காது.

விடுதலை உணர்வு மொழிவழி தேசிய இனங்களுக்குள் விழித்துக் கொள்வதற்கு முன், இந்த இந்தியாவை வெள்ளைக்காரர்களுக்கு நெடுநாள் ஆளவேண்டும் என்று கனவு இருந்தது. அந்த கனவை நிறைவேற்ற. இரண்டு எதிரெதிர் தத்துவங்களை நிறுவவேண்டிய தேவை ஏற்பட்டது.

புதிய தத்துவங்களை உடனடியாக இங்கே நிறுவிட முடியாது என்று தெளிவாக உணர்ந்த வெள்ளையர்கள், ஏற்கனவே இருந்த கலாச்சார மரபியல்களைக் கொண்ட இனங்களை ஒரு பொதுமைக்குள் இணைக்கத் திட்டமிட்டனர். அந்த இணைப்பின் மிகப்பெரிய தூதுவர்கள் மார்க்ஸ் முல்லரும், கால்டு வெல்லும். இந்த இருவரும் ஒரே நோக்கத்திற்காக செயல்பட்ட இரண்டு எதிர்ப்புநிலை தத்துவ போதகர்கள்.

தற்போதைய இந்திய நிலப்பரப்பில் அப்போதைய காலணி ஆதிக்கவாதிகளாக இருந்த பிரிட்டீஸ் கம்பெனிக்கும், பிரஞ்சு கம்பெனிக்கும் தனக்குள் இருந்த போட்டியும், ஆரிய வர்ணா சிரமத்திற்கும் - தமிழர் என்ற மெய்யியலுக்கும் அந்த காலந்தொட்டு இருந்த பகைமையை முதலில் பயன்படுத்தி கொண்ட கிழக்கிந்திய கம்பெனி, மாக்ஸ் முள்ளரை களமிறங்கியது.


**Dortmund மாநகரில்....** **இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**


மாக்ஸ் முள்ளர்

வர்ணாசிரம விதிகளை கொண்டிருந்த போதும், தமிழர் மெய்யியாளுக்கும், இன வரையறைக்கும் இருந்த தெளிவான விளக்கங்களை ஆரிய வர்ணாசிரமம் கொண்டிருக்கவில்லை. ஆரிய வர்ணாசிரமத்தை நிறுவனமயப் படுத்தப்பட வேண்டிய அவசியம் ஆரியர்களுக்கும், அவர்களை நெடுநாளைக்கு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள நினைத்த கம்பெனிக்காரர்களுக்கும் “மாக்ஸ் முள்ளர்” தேவைப் பட்டார். பிராமணிய - ஆரிய மரபுகள் நிறுவனமயப் படுத்தப் பட்டது.

இந்த பிரடெரிக் மார்க்சு முல்லர்தான் முதன் முதலில் “இந்தியா” என்ற ஒரு தத்துவத்தை *(Concept of India)* உருவாக்கினார். இவருடைய மேற்பார்வையில் உருவானதே கிழக்கு இந்திய புனித நூல்கள் *(Sacred Books of the East)* விக்டோரியாவின் காலத்தில் 50 தொகுதிகளை கொண்ட புத்தகமாக வெளியிடப்பட்டது. மேலும் மார்க்சு முல்லர் “ரிக் வேதம்” என்ற ஒரு நூலை இங்கே வெளியிட, அந்த காலத்தில் இவருக்கு கிழக்கு இந்திய கம்பெனி கொடுத்த தொகையின் அளவு சுமார் 40 இலட்சம் ரூபாய்.

இந்தியா சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியா என்ற கட்டமைப்பிற்கு அடிக் கோடிட்டதே இந்த மார்க்சு முல்லரும், நிவனமயப்படுத்தப்பட்ட ரிக் வேத நூற்களும் மட்டுமே!. மார்க்சு முல்லர் கிருத்தவத்திற்கு எதிரான மனநிலை உடையவர் என்பதும், அவரது பல ஆய்வுக் கட்டுரைகள் கிருத்துவத்தில் படைப்பின் தோற்றத்திற்கு எதிரானது என்பதும் உலகறிந்த விடையம்.

*1859* ஆம் ஆண்டில் மார்க்சு முல்லர் *"A History of Ancient Sanskrit Literature So Far as it Illustrates the Primitive Religion of the Brahmans"* என்ற புத்தகத்தையும், *1878* இல் *"Lectures on the origin and growth of religion as illustrated by the religions of India"* என்ற புத்தகத்தையும், *1883* ஆம் ஆண்டில் *"India : what Can it Teach Us?: A Course of Lectures Delivered Before the University of Cambridge"* என்ற புத்தகத்தையும் வெளியிட்டார்.

அதே கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரம் விக்டோரியா மகாராணியின் கையில் இருந்த காலத்தில், ஆரிய வர்ணா சிரமத்திற்கு உட்படாத இந்தியாவின் தெற்கு பகுதியில் வாழ்த்த மக்களை, ஆங்கிலேயர்களின் நிர்வாக வசதிக்காக வைத்த பெயர் “திராவிடம்” என்பதாகும்.

கிழக்கிந்திய கம்பெனியின்


THOOYA COMMUNICATION




Lyca TV
BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund



உங்கள் பேராதரவுடன்
10ஆம் ஆண்டில்
கால் பதிக்கும் உங்கள்...
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
HAVE A MERRY
Christmas
Nila
Quality Products
AGAM
Healthy and tasty Foods
அகம்
Double Horse
Rabeena
Aachi
The Mother of Good Taste
BTM
TRS
ASIA'S FINEST FOODS
இனிய
கிறிஸ்துமஸ்
நல்வாழ்த்துகள்
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de

இந்தியாவில் வடக்கே இருந்த "ஜான் கம்பெனி" நிருவாகி எப்படி மாக்ஸ் முல்லரை பயன்படுத்தி கொண்டாரோ? அதே, போல அதே கம்பெனியின் தெற்கு பகுதி குத்தகைக்காரருக்கு நிர்வாகப் போட்டியாக ஒரு தத்துவ உருவாக்கம் தேவைப்பட்டது. அதை விக்டோரியா மகாராணி சொன்ன "திராவிடம்" என்ற சொல்லாடல் பயன்படுத்த முற்பட்டனர்.

மாக்ஸ் முல்லர் வாழ்ந்த சமகாலத்தில் "கால்டு வேல்" இங்கே "திராவிட மொழிக்கான ஒப்பிலக்கணம்" படைக்கப்பட்டு ஆதாரமே இல்லாத "திராவிடம்" என்ற சொல்லாடல் அச்சில் ஏறியது.

வரலாற்றை மிகவும் உற்று நோக்கினால் கிழக்கிந்திய கம்பெனியின் இரண்டு குத்தகைக் காரர்களுக்கு நடந்த போட்டியே, இன்று நமது இந்தியாவில் இருக்கின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆரியமும் திராவிடமும். ஏற்கனவே துருக்கியில் இருந்து வந்திறங்கிய ஆதாரமற்ற வேத ஆகமங்களை நிறுவனமயப்படுத்த மாக்ஸ் முல்லரும், விக்டோரியா மகாராணியின் எச்சிலில் பிறந்த "திராவிடம்" என்ற சொல்லாடலுக்கு உயிர்கொடுக்க "கால்டு வெல்" லும் பயன்பட்டனர்.

முதலாம் உலகப்போரில் தொடங்கிய ஐரோப்பியர்களின் இனப்பகையும், போட்டி மனப்பான்மையும் ஆரியம்-திராவிடம் வரை வந்து நிற்க, இதில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற தமிழினம் வேட்டி உருவப்பட்டு நிற்பதே கொடுமையிலும் கொடுமை.

நீங்கள் உண்மையில் தமிழர் யார்? என்று தெரிந்து கொள்ள உங்களின் பார்வையினை "குமரிக்கண்டம்" என்ற புள்ளியில் இருந்து தொடங்க வேண்டும். இதில் நீங்கள் தொடங்கினால் மட்டுமே ராவணன் யார்? உலகின் முதல் நாகரீகம் என்று சொல்லப்படும் சுமேரிய நாகரீகம் தோன்றியது எங்கிருந்து? யூதர்களின் தோற்றுவாய் என்ன? அவர்களின் மொழியின் தோற்றுவாய் எது? சிந்து சமவெளி, கரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகம் யாருடையது? என்றெல்லாம் உங்களின் பார்வையை விரிவு செய்யவேண்டும்.

கீழடி நாகரீகம் வெளியில் தெரிந்து விட்டது, மாக்ஸ் முல்லர் வகையறாக்கள் அதை இந்து நாகரீகம் என்றும், கால்டு வெல் வகையறாக்கள் அதை திராவிட நாகரீகம் என்று சொல்கிறது. கிழக்கு இந்திய கம்பெனி போட்டியாளர்களின் நீட்சி கீழடிவரை நீள்கிறது.

தமிழர்கள் இதில் என்ன செய்ய முடியும்?

குமரிக்கடலில், சரியாக வள்ளுவர் சிலையில் இருந்து 300 மீட்டர் தெற்கு நோக்கி நகர்ந்து 250 மீட்டர் மூழ்கினால் அங்கே அழகான தமிழர் நாகரீகம் பொருந்திய கட்டிடங்கள் மாடமாளிகைகள் கூடிய இடிபாடுகள் இன்றும் கடலில் உறங்கிக்கொண்டு இருக்கிறது. அந்த பகுதிகள் இன்று அமெரிக்க அணுக்கழிவுகளால் நிரப்பப்பட்டு வருகிறது. நாம் என்ன செய்து விட்டோம்?

காவிரி புகும் பட்டினமாம் பூம்புகாரில் கண்ணகி சிலை நிற்கும் இடத்தில் இருந்து சரியாக 60 மீட்டர் கிழக்கு நோக்கிய தொலைவிலும், 400 அடி ஆழத்திலும் ஒரு அழகிய நகரம் அதன் இடிபாடுகளோடு உறங்கிக்கொண்டு இருக்கிறது. இதை துல்லியமாக கண்டறிந்து ஆய்வு முடிவுகளை சமர்ப்பித்த ஜெர்மானிய கடல் ஆய்வாளர் "வில்லியம் கூக்" இந்தியாவில் நுழைய தடை செய்யப்பட மனிதர்களில் ஒருவர். இன்னும் இப்படி எத்தனையோ? நீளும்...

உலகின் மிக தொன்மையான இனத்தின் மீது, அதனில் இருந்து திரிப் படைந்த மற்ற இனங்கள் பகை கொள்வது இயற்கைதான். ஆனால், தொன்மை வாய்ந்த இனம் தனது தொன்மையை அறியாமல் இருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

கீழடியில் கிடைக்கப்பட்ட பானை ஓட்டில் எழுதப்பட்டிருந்த "ஆதன்" என்ற குலசாமிக்கு அருள் இருந்தால் இந்த இனம் விழித்துக் கொள்ளட்டும்.

**மூலம் : வீரத்தமிழர் முன்னணி,**
**கீழடியும் வேரும்.**


புதுப்பொலிவுடன்
மீண்டும்....
ESTD 1992
santhoshphotography.com
மங்கையரின் மனங் கவரும்
2020 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!
இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### காத்திருப்பு!



வெள்ளைக் காகிதம்
காத்திருக்கின்றது
கருத்த மை கொண்ட
பேனாவிற்காக...

**காத்திருப்பு!**



நாளைதான் பிறந்தநாள்
இன்றே காத்திருக்கின்றது
நேற்றே வாங்கிவைத்த
புது உடுப்பும், பலகாரங்களும்!

**காத்திருப்பு!**



காதல், கணவன்மார்களின்
வரவிற்காக காத்திருக்கின்றாள்!
விதவையான பூக்காரி!

**காத்திருப்பு!**

### கொண்டாட்டம்

இரவுக்கு கொண்டாட்டம்.
பகல் தூங்கி வழிகின்றது?
இரவு விடுதி!

## அகர கவிக்களம்....

## கோடிக்கு

மகிழ்ச்சி வேண்டுமென
மனிதம் தொலைத்து
புகழ்ச்சி தேடியதில்
பைத்தியம் தலையில் பிடித்தது,
நடையும் தளர்ந்தது
நாடியும் நின்றது,
கோடிக்கா இந்த நிலை.

**கெங்கா ஸ்டான்லி**



## எதிர்காலம்

வருவது வரட்டும்
என்பதைவிட,
வருவதை ஏற்போம்
என்பதே வாழ்வியல்.

## இடம்

பேசக்கற்றுக் கொள்க!
பேசாதிருக்க வேண்டியது
எங்கே என்பதை
அதுவே கற்றுத்தரும்.

## வெற்றி

யாரோ சொல்கிறார்கள் என
யாவற்றையும் செய்வதை விட
நாம் செய்வதுவே முதன்மையானால்
அதுவே வெற்றியின் சூத்திரம்

## உலகம்

கணநேரம்
பார்வையைத் திருப்பாது
கண் பார்ப்பதைத்
தொடர முயற்சியுங்கள்!
உலகு அவசரமானது என்ற
உண்மை புரியும்

## வேர்

பொன் மதிப்பைப் போற்றுமளவிற்கு
மண்ணைப் போற்றுபவர் எவருமிலர்
பொன்னும் மண்ணிருந்தே வந்தது.

இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்

**V one DISTRIBUTION**

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

**Handy Verträge ab 1,- €**
**Handy Zubehör**
**Handys**
**Handy Reparatur**
**Festnetz DSL**
**Prepaid SIM**
**Prepaid Guthaben**

**KFZ Gutachten**
**Passbilder**
**Event Fotos& Videos**

**Privat Kredit**

**Handy Versicherung**
**KFZ Versicherung**
**Haftplicht Versicherung**
**und vieles mehr...**

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
O2
otelo

# பொலிவியாவில் பொம்மை அரசு தீர்வா புதிய தலைவலியா?



பூமிபுத்திரன்



ஈவோ மொராலஸ்

ஜனநாயக உலகில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் புரட்சிகள் வெடிப்பது உலகெங்கிலும் அவதானிக்கப்பட்டு வருகின்றது. அவற்றுள் சில இயல்பான, தன்னெழுச்சியான மக்கள் செயற்பாடுகளாக உள்ளன. ஒரு சில மக்கள் போராட்டங்கள் 'அந்நிய சக்தி'களால் தமது பூகோள, வர்த்தக, சுரண்டல் நலன்களுக்காகத் தூண்டி விடப்படுபவையாக உள்ளன. வரலாறு நெடுகிலும் இதற்கான பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

நிலப்பரப்பு அடிப்படையில் உலகின் 27ஆவது பெரிய நாடும், தென்னமெரிக்காவில் ஐந்தாவது பெரிய நாடுமான பொலிவியாவில் கடந்த 14 வருடங்களாக அரசுத் தலைவராகப் பதவி வகித்து வந்த ஈவோ மொராலஸ் தனது பதவியைத் துறந்து மெக்சிகோ நாட்டில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளார்.

அக்டோபர் 20ஆம் திகதி நடைபெற்ற அரசுத் தலைவர் தேர்தலில் 4ஆவது தடவையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே அவர் தனது பதவியைத் துறந்துள்ளார்.

பொலிவிய வரலாற்றிலேயே அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பழங்குடி இனத்தவரான மொராலஸ், வெறுமனே மக்கள் போராட்டம் காரணமாகத் தனது



ஜூனைன் அனெஸ்





பதவியைத் துறக்கவில்லை. இராணுவத் தளபதி ஜெனரல் வில்லியம்ஸ் கலிமான் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் முன்வைத்த 'வேண்டுகோளுக்கு' அமைவாகவே பதவி துறந்தார் எனக் கூறப்படுகின்றது. ஆனால், இது மட்டும் காரணமல்ல என்பதே உண்மை.

தென்னமெரிக்காவைப் பொறுத்தவரை பெற்றோலிய வளம் அதிகமுள்ள நாடு வெனிசுவேலா. இந்த வரிசையில் இரண்டாவதாக உள்ள நாடு பொலிவியா. அது மாத்திரமன்றி மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கான மின்கலங்களைத் தயாரிக்கும் மூலப் பொருளான லித்தியம் எனும் கனிமப்பொருள் பொலிவியாவில் அபரிமிதமாக உள்ளது.

வெனிசுவேலாவில் இடதுசாரி அரசாங்கம் ஆட்சியில் உள்ளதைப் போன்று பொலிவியாவிலும் மொராலஸ் அவர்களின் வருகையைத் தொடர்ந்து இடதுசாரி அரசாங்கம் உருவானது. வெனிசுவேலாவைப் போலவே பொலிவியாவிலும் எண்ணை மற்றும் கனிமவளச் சுரங்கங்கள் அமெரிக்க வர்த்தக நிறுவனங்களின் கரங்களில் இருந்து பிடுங்கப்பட்டு அரசுடமை ஆக்கப்பட்டன.

அன்றுமுதல் இந்த இரண்டு நாடுகள் மீதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தென்னமெரிக்காவில் அமெரிக்க ஏகாபத்தியத்தின் சதி நாசகார வேலைகள் பன்னெடுங் காலமாகவே நடைபெற்று வருகின்றமை ஒன்றும் இரகசியமல்ல. தனது பூகோள மற்றும் தங்கு தடையற்ற சுரண்டல் நடவடிக்கைகளுக்காக மிக மோசமான மனித உரிமை மீறல்வாதிகளையும், சர்வாதிகாரிகளையும் ஆட்சி பீடத்தில் அமர்த்தி அழகு பார்த்து வந்த அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தின் சிதைவின் பின்னர் தனது நடவடிக்கைகளைச் சற்றுத் தளர்த்திக் கொண்டது. எனினும், டொனால்ட் ட்ரம்ப் ஆட்சி பீடம் ஏறியதன் பின்னான காலகட்டத்தில் முன்னைய நடவடிக்கைகளைப் புதுப்பித்தது மட்டுமன்றி, அவற்றைப் பகிரங்கமாக மேற்கொள்வதையே தனது வெளியுறவுக் கொள்கையாகவும் ஆக்கிக் கொண்டுள்ளது.

வெனிசுவேலாவைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிகளுள் ஒன்றின் தலைவரை அந்த நாட்டின் உத்தியோகபூர்வ தலைவராக அங்கீகரித்துள்ள அமெரிக்கா, அண்மையில் மறைமுகமாக இராணுவச்

சதிப் புரட்சி ஒன்றை அரங்கேற்ற முயன்று தோல்வியைச் சந்தித்துள்ளது. வெனிசுவேலா இராணுவம் இன்னமும் அரசுத் தலைவர் மடுரோ அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து நிற்பதால் அமெரிக்க முயற்சி தோல்வியில் முடிந்தது.



ஆனால், பொலிவியாவில் அமெரிக்கா நினைத்தது இராணுவத்தின் துணையோடு நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 12இல் மொராலஸ் நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, இடைக்கால அரசுத் தலைவியாகப் பொறுப்பேற்றுள்ள மேலவை உறுப்பினர் ஜீனைன் அனெஸ் 11 வருடங்களாக துண்டிக்கப்பட்டிருந்த அமெரிக்காவினுடனான உறவைப் புதுப்பித்து, இந்த ஒட்டுமொத்த நாடகத்தின் சூத்திரதாரி யார்? என்பதை உலகிற்குக் காட்டியுள்ளார்.

இந்த நிமிடம் வரை மொராலஸ் அவர்களின் சோசலிச இயக்கம் என்ற கட்சியே நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. அந்தக் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றம் வருவதைத் தடை செய்துவிட்டு, எதிர்க்கட்சி வரிசையில் உள்ள ஒருவரை அரசுத் தலைவராக அறிவித்த போதும், தார்மீக அடிப்படையிலான எந்தக் கேள்வியையும் எழுப்பாமல் மேற்குலகம் அவரை ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்குலகின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக அவதானித்து வருவோருக்கு இத்தகைய விடயங்கள் புதிதல்ல. தென்னமெரிக்காவில் ஈக்குவடோர் மற்றும் சிலி ஆகிய நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மிகப் பிரமாண்டமான மக்கள் போராட்டங்கள் நாளாந்தம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஈக்குவடோர் நாட்டின் அரசுத் தலைவர் லெனின் மொறேனோ அரசுத் தலைவர் மாளிகையில் தொடர்ந்து இருக்க


ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

**R.RAGUNATHAN**
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

**T. ANBALAGAN**
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS MONEY TRANSFER · Ria · MoneyGram · TEMPO MONEY TRANSFER

**IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390**




முடியாத சூழ்நிலையில், வேறொரு இடத்தில் இருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. சிலி நாட்டு அதிபர் செபஸ்தியான் பினோராவின் செல்வாக்கு 9 வீதமாகச் சரிந்துள்ளது. ஆனால், அவர்கள் இருவரும் அமெரிக்காவின் நலன்களை ஆதரிப்பவர்கள் என்பதால், அங்கெல்லாம் அமெரிக்கா அவர்களைக் காப்பாற்ற முயற்சித்து வருகின்றது.

2005 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் 54 வீதமான வாக்குகளைப் பெற்று அரசுத் தலைவரான மொராலஸ், முதலில் செய்தது நடவடிக்கை தன்னுடையதும், மந்திரிசபை உறுப்பினர்களதும் சம்பளத்தை இல்லாதொழித்ததே!. பல தசாப்தங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த பழங்குடி இன மக்களுக்கு நாட்டின் செல்வத்தைப் பகிர்ந்தளிக்கப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்த அவர், நாட்டின் எண்ணெய் உட்படக் கனிம வளங்களைத் தேசியமயமாக்கினார். பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்குக் கசப்பான நடவடிக்கைகளே என்பது வெள்ளிடைமலை.

மொராலஸின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் 38 வீதமாக இருந்த நாட்டின் வறுமை நிலை தற்போது 17 வீதமாகக் குறைக்கப்பட்டு உள்ளது. குறைந்தபட்ச சம்பளம் 104 மடங்காக அதிகரிக்கப்பட்டு உள்ளது. பழங்குடி மக்கள் வாழும் பின்தங்கிய பகுதிகளில் 5,000 வரையான மருத்துவமனைகளும், பாடசாலைகளும் திறக்கப்பட்டு உள்ளன. அவரது 14 வருட ஆட்சிக் காலத்தில் தனிநபர் வருமானம் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.

இரண்டாவது தடவையாகப் போட்டியிட்ட தேர்தலில் 64 வீதமான வாக்குகளைப் பெற்ற மொராலஸ் மூன்றாவது தேர்தலில் 61 சதவீத வாக்குகளைப் பெற்றார். இத்தகைய மக்கள் செல்வாக்குமிக்க ஒருவர், சாமான்ய மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட ஒருவர் இன்று 'மக்கள் போராட்டம்' காரணமாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகுகின்றது என்றால், அது நம்பும் வகையில் இல்லை. அந்நிய நாடுகளின் சதியே அதற்குக் காரணம் என்பது சொல்லாமலேயே புரிந்து விடும்.

இன்றைய நிலையில் பொலிவியாவில் மொராலஸ் ஆதரவாளர்களும், வலதுசாரி அரச ஆதரவாளர்களும் ஏட்டிக்குப் போட்டியான ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றனர். புதிய தேர்தல் ஒன்றை நடாத்தப் போவதாக தற்காலிக அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், மெக்சிகோவில் தஞ்சம் புகுந்துள்ள மொராலஸ் போட்டியிடும் வாய்ப்பு மறுக்கப் பட்டுள்ளது.

நடப்பு நிகழ்வுகளைப் பார்க்கும் போது, அமெரிக்க ஆதரவு அரசாங்கம் ஒன்றே அமைவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிகின்றது. ஆனால், காலங்காலமாக ஓரங்கட்டப்பட்டு வந்த பழங்குடி மக்கள் கடந்த 14 வருடங்களில் அனுபவித்த முன்னேற்றங்களை இலகுவில் விட்டுத்தர முன்வருவார்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்!.


Chairman
SADIK BASHA.M
LIMRA
BAGS
Pvt. Ltd.,
Online Shopping : www. limramart.com
No.14, Pensioner Street, Thennur,
Trichy - 620 017.
Touch with us : 0431 - 4346053,
Mob : +91 97861 14635.
domesticlimra@gmail.com
www.limrabags.in

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

## பகுதி.26

ஒரு நாட்டினுடைய அரசியல் நிர்வாகமும், பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பவை உள்நாட்டு கனிம வளங்கள் இல்லாமையும், விவசாயம் வீழ்ச்சியடைதலும், பொருளாதார உற்பத்திக்கான தொழிற்சாலைகள் இல்லாமையுமே காரணமாக அமைந்து விடுகின்றன.

மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய விவசாயத்தையோ பயிர்ச் செய்கைகளையோ ஒரு நாடு கொண்டிருக்கா விட்டால், உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம், அந்த நாடு எங்கிருந்து இறக்குமதி செய்கின்றதோ, அந்த நாட்டிடம் கையேந்தி நிற்பது மட்டுமல்ல விலையேற்றங்கள், வரிகள் போன்றவற்றால் பொருளாதாரச் சிக்கலில் சிக்குகின்றது.

விவசாயமும், பயிர்ச் செய்கையுமே ஒரு நாட்டினுடைய அசைக்க முடியாத வளமாகும். ஒரு நாட்டின் மண் வளம், நீர் நிலைகள் போன்றவை எப்படி விவசாயத்தையும் தங்க வைத்திருக்கின்றதோ, இவையிரண்டும் தவிர்ந்த அனைத்து மற்றைய தேவைகளையும் பொருள் உற்பத்திச் தொழிற்சாலைகள் பூர்த்தி செய்கின்றன.

இந்த உற்பத்திகள் அந்நாட்டு மக்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் ஏற்றுமதிக்கான சூழ்நிலைகளையும் ஏற்படுத்துகின்றது.

விவசாயத்தைப் பொறுத்த வரை முன்பொரு காலத்தில் இலங்கையில்; திருக்கேதீசுவரம் மாதோட்டப் பகுதியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட நெல், இலங்கை மக்களின் தேவை போக இந்தியாவிற்கு ஏற்றமதி செய்யப்பட்டதாக அறிகிறோம்.

ஒரு நாடு தனது நாட்டில் என்னென்ன வளங்களிருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் தனது மக்களின் மகிழ்ச்சியான நல்வாழ்வுக்கு பயன்படுத்தி, தனது மக்களை மற்றைய நாடுகளுக்கு கடனாளியாக்கமலும், தலைகுனிவு



ஏற்படாலும் வைத்திருந்தால் அந்த நாடே செல்வந்த நாடாகும்.

ஒவ்வொரு குடிமகனும் மகிழ்ச்சியாகவும், மனநிறைவாகவும் வாழ்வதை வைத்துத்தான் ஒரு நாட்டின் பொருளாதாரம் எத்தகையது? எனத் தீர்மானிக்கப்படுகின்றது.

உலக நாடுகளின் பெரும்பாலான நாடுகள், ஒன்றுக்கொன்று நல்லெண்ணம் கொண்டிருப்பது போல வெளிப்படைத் தோற்றம் காணப்பட்டாலும், அந்தந்த நாடுகளின் பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதைக் கண்டறிந்து, அவற்றின் பொருளாதார அரசியல் கட்டமைப்பைச் சீரழிப்பதிலேயே அந்தந்த நாட்டுக்குரிய உளவு நிறுவனங்கள் செயல்படுகின்றன. இதை பொருளாதார, அரசியல் பனிப்போர் என விளித்துக் கொள்ளலாம்.

இந்த கட்டுமானத்தை சிதைப்பதில் இல்லாத ஒன்றை பூதாகரமாக்கி, தொழிற்சங்கங்களின் தலைவர் உட்பட அதன் நிர்வாகிகள் எனப் பொறுப்புக் கூறுபவர்களிடம் தொழிலாளர்களின் சம்பளப் பற்றாக்குறை, அவர்களுக்கான தொழிற்சாலை வரப்பிரசாதங்களை அதிகரிக்கச் சொல்லி, இத்தகையோரை மூளைச்சலவை செய்வதில் அந்நாட்டில் பணிபுரியும் தூதரகங்கள் இரகசியமாக அதற்கான குழுவின் ஒற்றர்கள்; மூலமாக இயக்குகின்றன.

ஒவ்வொரு நாளும் ஒரு நாட்டினுடைய பத்திரிகைச் செய்திகள் தொடக்கம், அரசுதலைவர், அமைச்சகர்கள், அதிகாரிகள், மக்கள் வரை அவர்களின் எண்ணப்பாடுகள் அனைத்தும் சேகரிக்கப் பட்டு, தூதரகங்கள் தமது நாட்டுக்கு அனுப்பிக் கொண்டே இருக்கின்றன.

அந்த நாட்டின் இராசதந்திரிகளே எப்படிப் போராட்டங்களை கையாள வேண்டும்? என்பதை தூதரகங்களுக்கு அறிவிக்கின்றனர். தொழிற்சங்கங்களின் பொறுப்புக் கூறலில் இருக்கும் நிர்வாகிகளை நட்புக் கொண்டு, அவர்களை விடுதிகளுக்கு அழைத்து, தமது நோக்கத்தைக் கூறி,



இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியது போன்று பணம், பொருள், பெண் என எதைக் கொடுத்தால் அவர்களைத் தமது வலையில் வீழ்த்தலாம் என்பதை அறிந்து, அவர்களை உளவு நிறுவன ஒற்றர்கள் சிலந்தி வலையில் சிக்க வைப்பது போல வைத்து விடுவார்கள். சிக்கியவர்கள் அதிலிருந்து மீளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள்.

பேரணிகளும், ஊர்வலங்களும் நடைபெறத் தொடங்கும் அதே வேளை தொழிற்சாலை நிர்வாகத்தை அணுகும் உளவு நிறுவன ஒற்றர்கள் தொழிலாளிகளுக்கு எவ்விதமான சம்பள உயர்வோ தொழிற்சாலை வரப் பிரசாதங்களோ கொடுக்கத் தேவை இல்லை என்று ஆலோசனை வழங்குவார்கள். உளவு நிறுவனங்களின் இச்செயல்பாடானது ஒரு சிறு பொறியைப் பஞ்சுத் தொழிற் சாலைக்குள் எறிந்தது போன்றாகின்றது.

இத்தகு ஆலோசனை வழங்குவதற்கென்றே பல்துறைக் கல்விநிலை கொண்ட அறிஞர்கள் இருப்பார்கள். பெரும்பாலும் சுதேச அறிஞர் ஒற்றர்களையே தூதரகங்கள் பயன்படுத்தும். தனது நாட்டின் மீதான தேசப்பற்று இல்லாத துறைசார் அறிவைக் கொண்டிருப்போர், உளவு நிறுவனங்களின் தொடர்பாளர்களின் சூழ்ச்சி வலையில் விழுந்து விடுவார்கள்.

தொழிற்சாலை நிர்வாகமும், தொழிற்சங்க நிர்வாகமும் முரண்பட்ட நிலையில் பேரணிகளாகவும், ஊர்வலங்களாகவும் அது அமையும் போது வன்முறைக்கான சாத்தியத்தையும், தூதரக உளவு நிறுவனங்கள் ஒற்றர்கள் மூலமாக ஏற்பாடு செய்வார்கள்.

ஊர்வலங்கள் நடைபெறும் போது, விசமிகளும் கலந்து கொண்டு, தொழிற்சங்க விசுவாசிகள் போல கோசம் எழுப்புவதுடன், உணர்ச்சி வசப்பட்டது போல நடித்து, அரச சொத்துக்களையும், தனியார் சொத்துக் களையும், பொதுச் சொத்துக் களையும் நொருக்கியும் எரித்தும் சேதப் படுத்துவார்கள்.

அரச சொத்துக்களோ, பொதுச் சொத்தக்களோ, தனியார் சொத்துக்களோ அவை எதுவாக இருந்தாலும், அவை அந்த நாட்டினுடைய சொத்துக்கள் மட்டுமல்ல அவை செல்வமுமாகும்

அழிக்கப்பட்ட சொத்துக்களை மீளமைப்பதற்கு பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது. அதேவேளை நடைமுறை அரசின் மீது அதிருப்தியும், அவர்களை அரசிலிருந்து நீக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் மக்கள் கொள்ளத் தொடங்கி விடுவார்கள்.

தமக்குச் சாதகமான காலத்தை எதிர்பார்த்திருந்த எதிர்கட்சிகள், அரசுக் கெதிராக செயல்படத் தொடங்குவார்கள். எப்படியும் ஆட்சியை அகற்றியே தீர வேண்டும் என்று அவர்கள் நாடாளு மன்றப் போர் தொடுப்பார்கள்.

பேரணிகள், ஊர்வலங்கள் என்பன சனநாயக உரிமை என்று கருதும் மக்கள்கூட இவற்றால் தமது அன்றாட வாழ்க்கைக்கு ஏற்படும், குறிப்பாக போக்குவரத்து நெரிசல் தடைகளை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

தொழிற்சாலைகள், தொழிற் சங்கங்கள், மக்கள் என மும்முனைகளையும் உளவு நிறுவனங்கள் மோத வைப்பதன் மூலம், சறுக்கு மரத்தில் ஏறுகின்ற சாண் ஏற, முழம் சறுக்குகின்ற நிலையை நாடு அடைகிறது.

விவசாய உற்பத்தி, பயிர்ச் செய்கை, தொழிற்சாலை உற்பத்திகள் என ஒரு நாடு கொண்டிருந்தாலும், இயற்கை அழிவுகள் தவிர்ந்து பிற காரணிகளான பேரணிகள், ஊர்வலங்களால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியை நிவர்த்தி செய்ய மக்களின் பணிச் சம்பளத்தை அதிகரிக்கச் செய்யாமலும், அதே நேரத்தில் அதிகரித்த வரி விதிப்பிற்கான இக்கட்டான நிலைமைக்கு அரசு வந்துவிடுகின்து.

உளவு நிறுவனங்கள், விவசாயம், பயிர்ச் செய்கை, மருத்துவம், கல்வி, உள்நாட்டு கனிம வளங்கள் போன்றவற்றைச் சிதைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன.

**(தொடரும்)**

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?**

**என்ர பாடு ஏதோ போகுது பாருங்கோ. வருசம் முடியப்போற நேரத்தில நிக்கிறம். வருடம் துவங்கேக்க எப்பிடி நிண்டமோ, அப்பிடியே அதே இடத்திலேயே நிக்கிறம் பாருங்கோ. அதிலேயே நிண்டால் என்னெண்டு கேக்குறியளோ?**

கொஞ்சம் கூட குணாதிசயங்களில மாற்றமில்லாமல், செயலிலையும் முன்னேற்றமில்லாமல் அங்கினையே நிக்கிறதுதான் பாருங்கோ அது. நாங்கள் காலாதி காலமாக நிண்ட இடத்தை விட்டு நகருறேல்லை எண்டு பலர் புறுபுறுக்கிறது விளங்குது. ஐயோ, தெரிஞ்ச விசயம் தான் பாருங்கோ. ஆனால் நான் சொல்லுறது பழக்க வழக்கமாகிலும் மாறவேணும் எண்டுறதைத் தான் பாருங்கோ.

அடிப்படைப் பழக்க வழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்தால் அது சில இடங்களிலே பெரிய சிக்கல்களை உண்டாக்கிவிட்டிரும். ஆனால் பாருங்கோ அது அவசியமான இடங்களிலே அதைக் கடைப்பிடிக்காட்டில் பிரச்சனை வேற விதமாக வந்திரும். எங்கட மக்களுக்கு இரண்டு பிரச்னையும் இருக்குப் பாருங்கோ. என்ன பொடி போடுறன் எண்டு நினைக்கிறியளோ..? இல்லை இல்லை, எங்கட ஆக்களின்ர கடியைத்தான் சொல்லுறன் கண்டியளோ.

விசயம் என்னவெண்டா பாருங்கோ, தமிழரின்ர வாழ்க்கையில கொண்டாட்டம் இல்லாமல் இருக்காது. குடும்பக் கொண்டாட்டம் எண்டால், சாமத்திய வீடு தொடங்கி, கலியாணவீடு வரைக்கும் நடக்கும் பாருங்கோ. இப்ப புதுசா குழந்தை பிறக்குறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்பாக, தாயை இருத்தி வைச்சு ஏதோ கொண்டாடுகினம் பாருங்கோ. அதுமாதிரி பூப்புனித நீராட்டு விழாவுக்கு முதல் நாள் ஏதோ சீலைத் திருவிழா எண்டு கொண்டாடுகினமாம். சீலை கட்டி பழகுறதாம் அது.

என்ன கண்றாவியோ தெரியா பாருங்கோ, வகை வகையா கொண்டாட்டங்கள் நடக்குது பாருங்கோ. ஆனால் வருடா வருடம் விழாக்களை அதிகமாகக் கொண்டாடுற நாங்கள், விழாவுக்கு எப்பிடி உறவினர் மற்றும் நண்பர்களை அழைப்பது எண்டுறதையே மறந்திட்டம் பாருங்கோ. வந்தா வா, வராட்டிப் போ எண்ட கணக்கில போட்டுது எங்கட அழைப்பு.

ஒரு விழாவுக்கான அழைப்பு எப்பிடி இருக்கவேணும் எண்டொரு வரைமுறை இருக்குப் பாருங்கோ. சரி, ஊரில செய்யுறது போல, வெளிநாட்டில வீடு வீடாகக் கொண்டுபோய் அழைப்பு வழங்க முடியாது பாருங்கோ. தூரம், வேலைப் பளு, எண்டுறதெல்லாம் இருக்கு. அதனாலேயே பலர் கடிதம் மூலமாகவே அழைப்பை அனுப்புவது வழக்கம். ஆனால் அந்தக்காலமும் மலைஏறிப்போச்சுக் கண்டியளோ. ஐயோ இப்ப வாற விழா அழைப்புகளைக் கண்டால் தலை சுத்துது பாருங்கோ.

திருமண நிகழ்வொன்றுக்கு எனக்கு அழைப்பு வந்திச்சுது பாருங்கோ. எப்பிடி எண்டு கேளுங்கோவன். ஒருநாள் காலையில எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்துது கண்டியளோ. எடுத்து அல்லோ எண்டன். வணக்கம், அழைப்பிதழ் கிடைச்சுதோ எண்டு ஒரு குரல் கேட்குது. என்ன அழைப்பிதழ் எண்டு கேட்டுட்டு, என்ர மனிசியைக் கூப்பிட்டு அழைப்பிதழ் ஏதும் வந்ததோ எண்டு கேட்டன். ஒண்டும் வரேல்லை எண்டு மனிசி சொல்ல, அதுக்குப் பிறகுதான் நீங்கள் யார், என்ன அழைப்பிதழ் அனுப்பினியள் எண்டு கேட்டன். அழைப்பு எடுத்தது என்ர நண்பரின்ர மகன் பாருங்கோ.

அண்ணாக்குக் கலியாணம், உங்களுக்கு அழைப்பு அனுப்பச் சொல்லி அப்பா சொன்னவர், நாங்கள் முந்தநாளே அனுப்பிட்டம் எண்டு சொல்லிப்போட்டு பெடி தொலைபேசியைத்




துண்டிச்சிட்டுது. இதென்னடா கோதாரி, எல்லா கடிதமும் எனக்கு ஒழுங்கா வாறது. தண்டப்பணக் கடிதம் தொடக்கம், தொலைபேசிக் கட்டணக் கடிதம் வரை தவறாமல் வாறது, உந்த அழைப்பிதழ் மட்டும் எங்க போனது எண்டு எனக்கு ஒரே குழப்பம் கண்டியளோ.

வாற கடிதங்களை ஒழுங்கா எடுத்து வைக்கக்கூட உனக்கு நேரமில்லை எண்டு நான் மனிசியோட பாய, இவ்வளவு காலமும் வந்த கடிதமெல்லாம் எடுத்து வைச்சது ஆர் உன்ர சித்தப்புவோ எண்டு மனிசி என்மேல பாய, வீடு ரணகளம் ஆகீட்டுது கண்டியளோ. இப்ப அழைப்பிதழ் இல்லாமல் நான் எப்பிடி அந்தக் கலியாண வீட்டுக்குப் போறது எண்டு எனக்கு ஒரே குழப்பம் பாருங்கோ. இருப்புக் கொள்ள முடியாமல், திருப்பியும் ஒருக்கா மனிசியிட்ட கேட்டுப்பாப்பம் எண்டுட்டு, “ அழைப்பிதழை மாறிக்கீறி குப்பையோட எறிஞ்சுபோட்டியோ” எண்டு மெல்லமாக் கேட்டன் பாருங்கோ. அவ்வளவுதான், அண்டு மத்தியானச் சாப்பாடும் இல்லை பாருங்கோ.

அழைப்பிதழ் வரேல்லை எண்டால், பொய் எண்டு நினைப்பங்கள். வந்தது, ஆனால் இப்ப காணேல்லை எண்டால், ஒரு அழைப்பிதழைக்கூட கவனமா வைக்கத் தெரியாதவன் எண்டுவாங்கள். இப்ப எப்பிடி முகவரி கேக்குறது எண்டு தெரியாமல் முழிச்சுக்கொண்டு நிண்டன் பாருங்கோ. ஆத்தாக்குறைக்கு மனிசியோட வேற கொழுவிப்போட்டன். என்ன செய்யுறது எண்டு தெரியாமல், எப்ப கலியாணம் எண்டும் தெரியாமல், முகவரியும் தெரியாமல் முழுசிக்கொண்டு நிண்டன். கடைசியா மனிசியே தானாக வந்து, “அண்டைக்கு உங்கட நண்பரின்ர மகன் எடுத்தவரெல்லோ, அவரின்ர இலக்கத்துக்குத் திருப்பி ஒருக்கா எடுத்துக் கேளுங்கோவன் எண்டு சொல்லிச்சுது.

சரி அப்படியே செய்வம் எடுத்து நண்பரின்ர மகனுக்கு எடுத்தேன் பாருங்கோ. என்ர கெட்டகாலத்துக்கு பெடி வீட்டை நிண்டிருக்குது போல கிடக்கு. அப்பா நிக்குறார் அவரோட கதையுங்கோ எண்டு சொல்லிப் போட்டுது. இதென்னடா கருமம் எண்டு முழுசிக்கொண்டு நான் நிக்க, “என்ன மாதிரியடாப்பா, வேளைக்கே வந்திடு







என்ன" எண்டு நண்பர் சொல்ல எனக்கு ஒண்டும் சொல்ல முடியேல்லை. காலை ஒன்பது மணிக்கு ஆரம்பம் எண்டு சொல்ல, நான் அப்பிடியே எண்டு இழுக்க, நீ இன்னும் அழைப்பிதழ் பாக்கேல்லையே எண்டு என்ர நண்பர் பாய, ஏலாக்கட்டத்தில நான் உண்மையைச் சொல்லவேண்டி வந்திட்டுது பாருங்கோ.

அதடாப்பா நீ அனுப்பின அழைப்பிதழை மனிசி எங்கயோ வச்சிட்டுது எண்டு நான் இழுக்க, நண்பருக்கு ஒண்டும் விளங்கேல்லை. ஏன் உன்ர கைத்தொலைபேசி மனிசியோ வைச்சிருக்குது எண்டு ஆள் என்னட்ட கேக்க, இதென்னடா அழைப்பியதழ் பற்றி நான் கேட்டால், உவன் பாவி தொலைபேசி பற்றிக்கேக்குறான் எண்டு நான் முழுச, கடைசியா நண்பர் போட்டார் பாருங்கோ ஒரு போடு. என்ன தெரியுமே..?

என்னுடைய கைத்தொலை பேசியில இருக்கிற வைபர் எண்ட செயலிகுத்தான் அவை திருமண அழைப்பு அனுப்பியிருக்கினமாம் பாருங்கோ. அழைப்பிதழ் கடிதத்தில அனுப்புறது வீண் செலவு எண்டுறதால, வைபர் மூலமாக அனுப்பினவையாம் கண்டியளோ. நானோ ஊருக்குக் கதைக்கிற எண்டா மட்டும்தான் வைபர் பாவிக்கிறதே அடிக்கடி அதைப்பார்க்கிறதில்லை கண்டியளோ. எனக்கு கொஞ்ச நேரம் இரத்த ஓட்டம் உச்சி மண்டைக்குள்ளால பீறிட்டு வெளியில வந்திருமோ எண்டுற அளவுக்கு கடுப்பாயீட்டன் பாருங்கோ. எட கோதாரி, ஒரு அழைப்பிதழ் கூட அனுப்ப வக்கில்லாமல் எதுக்கு ஆகா ஓகோ எண்டு திருமணம் வைக்கவேணும் சொல்லுங்கோ பாப்பம். ஒரு திருமண அழைப்பிதழைச் செய்துபோட்டு, அதைப் படம் எடுத்து எல்லாருக்கும் அனுப்புறதுதானாம் இப்ப வழக்கம். அந்தக்கறுமம் எனக்குத் தெரியாது.

அழைப்பு எண்டுறது பிறரை மதித்து, அவர் வரவை வேண்டி அனுப்புறது கண்டியளோ. பிறருக்கிருக்கும் வேலைகளைத் தவிர்த்து, அவர்கள் எங்கள் நிகழ்வுக்கு வருகிறார்கள் எண்டால், அதற்கேற்ற மாதிரி அவர்களுக்கு அழைப்பு அனுப்ப வேணும் பாருங்கோ. இதென்னடா எண்டால், படம் எடுத்து எல்லாருக்கும் சும்மா தட்டி விடுறதுக்குப் பெயர் அழைப்பு இல்லை பாருங்கோ. அது அவமரியாதை. உந்த விசயத்தை என்ர இன்னொரு நண்பரிட்டச் சொல்ல அவன் விழுந்து விழுந்து சிரிக்கிறார். அவர் கனகாலமாக அழைப்பிதழைக் கண்டதே இல்லையாம். உப்பிடித்தானாம் அவருக்கு வாற அழைப்பெல்லாம் வருகுது பாருங்கோ.

வரவர மாமியார் கழுதை போல ஆகிறார் எண்டது போல; எங்கட பண்பாடு, வழக்கம், நியதி எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சுகொண்டு போகுது பாருங்கோ. இன்னும் கொஞ்ச நாளில நாங்கள் இதைவிடவும் மோசமான நிலையை அடையக்கூடும் கண்டியளோ. பண்பாட்டையும், வரலாற்றையும் மறந்த இனம் நிலைச்சு நிக்காது கண்டியளோ. இதை இனியாவது எங்கட ஆக்கள் உணருவினமோ எண்டுறதுதான் என்ர கேள்வி பாருங்கோ.

**கொஞ்ச நேரம் காத்தடித்து**
**ஓய்ந்துபோகலாம்**
**வானில் கூடி வரும்**
**மேகங்களும் கலைந்து போகலாம்**
**நேற்று வரை நடந்ததெல்லாம்**
**இன்று மாறலாம் - நாம்**
**நேர் வழியில் நடந்து சென்றால்**
**நன்மை அடையலாம்**

**- அப்ப வரட்டே**



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

பாகம் -10

## தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

# அடுத்து என்ன?

ஆயுத வழி ஈழப்போர் முடிவுற்றாலும், எதிரிகளின் இனவழிப்பு நடவடிக்கைகள் வேறுவழிகளில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதுபோல நாமும் ஈழவிடுதலையைத் தொடர்ந்து, வேறு வழிகளில் முன்னெடுத்துக் கொண்டுதான் இருக்கப்போகிறோம். இப்பொழுதைய முக்கியக் கேள்வி, எது மாதிரியான உத்திகளை எதிரி கையாள்கிறான்?, அதை எதிர்கொள்ள நாம் எது மாதிரியான உத்திகளைக் கையாள வேண்டும்? என்பதே!.

இன்று நமது சிக்கல்களைத் தீர்க்கும் முறை என்பது , எந்த உத்தி சிறந்தது? என்று ஆராய்ந்து, அதன்படி முழுத்திட்டமிட்டு, இலக்கை வீழ்த்த முனைகிறோம். இது சிங்களத்தின் தோல்வியுற்ற செயசிக்குறு போர் திட்டமிடல் போன்றது. சிக்கலான அமைப்புகளுக்கு இதுபோன்ற திட்டமிடல் உதவாது. சிக்கலான அமைப்புகளின் ஆராய்ச்சிபடி, “புலிகளின் போர் உத்திகள்தான் இருப்பதிலேயே சிறந்தது” என்று பார்த்தோம். அதன்படி எதிரியைவிட அதிக எண்ணிக்கையில் வேறுபட்ட உத்திகளும், முழுத் திட்டமிடல் இல்லாத சந்தர்ப்பவாத அணுகுமுறையே வெற்றியைத் தரும்.

இந்த உத்திகளின் சிறப்பு என்னவென்றால்? இவற்றை அனைத்துச் சிக்கலான அமைப்புகளுக்கும் பயன்படுத்தலாம். சமூகம் என்பது சிக்கலான அமைப்பு என்பதால், இன்று நிலவும் அனைத்து சமூக அரசியல் சிக்கல்களுக்கும் புலிகளின் அணுகுமுறைதான் தீர்வு. இதை இனி விரிவாகப் பார்ப்போம்.

ஒரு சமூகம் என்பது பல சிக்கலான அமைப்புகளை உள்ளடக்கிய மிகப்பெரிய சிக்கலான அமைப்பு. சமூகத்தின் அடிப்படை அலகு மனிதன், பின்பு குடும்பம், சமூக



அமைப்புகள், பொருளாதார அமைப்புகள், கல்வி அமைப்புகள், அரசியல் அமைப்புகள், இராணுவம், அரசு என்று பல்வேறு சிக்கலான அமைப்புகளை உள்ளடக்கியது. ஈழப்போரில் முக்கியமாக நாம் இழந்தது ஓர் அரசும், இராணுவ கட்டமைப்பையும், இலட்சத்திற்கு அதிகமான மக்களையும். இது மிகப்பெரிய இழப்பு என்பதில் ஐயமில்லை. ஆனால் நாம் இன்னும் முழுதாக ஈழத்தில் அழிந்து விடவில்லை. எதிரியின் இறுதி வெற்றி, நம்மை முற்றிலும் அழிப்பதிலேயே இருக்கிறது.

அவர்களின் அடுத்த இலக்கு மீதி இருக்கும் சமூக அலகுகள்தான். மனிதர்களை முன்புபோல சுட்டுக் கொல்ல முடியாது என்பதால், அவர்களின் உத்திகள் வேறுமாதிரி இருக்கும். உதாரணமாக, தமிழர்களை சிங்கள அடையாளத்திற்கு மாற்றுவது, மொழியை அழிப்பது, குடும்பத்தைச் சிதைத்து, பிறப்பு விகிதத்தை குறைப்பது, பொருளாதாரத்தை முடக்குவது, நிலத்தை அபகரித்து, சிங்களர்களைக் குடியேற்றுவது, தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளை அவர்களின் நோக்கங்களுக்கு இணங்க வைப்பது போன்று இருக்கும். புலிகள் இருந்தபோது இதெல்லாம் சாத்தியமில்லை, ஆனால் இப்பொழுது அவர்களுக்கு சாத்தியமான ஒன்றே.

புலிகளின் உத்திகளை இது போன்றச் சூழலுக்கு எவ்வாறு பயன்படுத்துவது? தமிழ் தேசியமும், எதிரியும் வெற்றிபெற போட்டி போடுகின்றனர். இதில் யார் அதிக வேறுபாடான வாய்ப்புகளை உருவாக்குகிறார்களோ? அவர்கள்தான் வெற்றி பெறுவர். உதாரணமாக சில சமூகச் சிக்கல்களை எடுத்துக் கொள்ளலாம்

ஒரு தமிழருக்கு ‘தமிழர்’ என்ற அடையாளத்தைப் பேணுவதற்கான வாய்ப்புகளைவிட, சிங்கள அடையாளத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகமானால், அவர் சிங்கள அடையாளத்திற்கு மாறுவார்.

தமிழ்வழியில் கல்வி கற்றால் ஏற்படும் வாய்புகளைவிட, ஆங்கிலவழியில் கல்வி கற்றால் அதிக வாய்ப்புகள் ஏற்படும் என்றால், மக்கள் ஆங்கிலவழிக்கு மாறுவர். இதுதான் தமிழகத்தில் நடக்கிறது.

ஒரு தமிழ் அரசியல் கட்சி தமிழ்த் தேசியம் பேசுவதைவிட, எதிரித் தேசியம் பேசினால் கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பும்,



தலைவர்களுக்கு பதவியும், கூடினால், அரசியல் கட்சிகள் எதிரிதேசியத்திற்கு மாறும். இவ்வாறுதான் திராவிடக் கட்சிகளை இந்தியம் வீழ்த்தியது. தமிழர் அரசியலைப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தை பலமுறை மத்திய அரசு கவிழ்த்தது. அதன்பின் இந்தியத்திற்கு தாவியபின் பதவிகளைக் கொடுத்தது, ஊழல்களைத் தாராளமாக அனுமதித்தது. இந்திய அரசு ஊழலை அதன் நோக்கத்திற்கு ஒரு கருவியாக ஊக்குவிக்கிறது.

இவ்வாறு ஒரு அரசினால் ஒவ்வொரு சமூக அமைப்பாக ஒழித்து, நம்மை இல்லாமல் செய்ய முடியும். ஈழத்தில் புலிகள் சென்றபின் சிங்களம் இதை ஆரம்பித்தது, தமிழகத்தில் நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய நிலவரம் அப்படியே தொடர்ந்தால், நாம் முற்றிலும் அழிவதற்கான வாய்ப்புகள் அதிகமானது. என்னுடைய அனுமானத்தில், இன்றைய தமிழர் நிலவரத்தை ஒரு சிக்கல் வரைபடத்தில் வரைந்தால் படம்-4 -இல் இருப்பதுபோல இருக்கும்.




நாம் வெற்றி பெற ஒரே வழி தான் உண்டு. எதிரி உருவாக்கும் வாய்ப்புகளைவிட, நாம் அதிக வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இதை எப்படி செய்வது? புலிகள் எப்படி சிறு சிறு குழுக்களாக கொரில்லாத் தாக்குதல் நடத்தி, வெற்றி பெற்று, மரபுவழிப் படையாக பரிணமித்தார்களோ? அதே போன்ற உத்திகளை இன்றைய சிக்கல்களுக்குச் செயல்படுத்த வேண்டும். அதை கீழ்வருமாறு செய்யலாம்.

நாம் பல்வேறு சமூக இயக்கங்களை பல வேறுபாடான உத்திகளின் அடிப்படையில் அமைத்து, அடையாளம், குடும்பம், பிறப்பு விகிதம், பொருளாதாரம் என ஒவ்வொன்றிலும் கொரில்லாத் தாக்குதல் போன்று பல வாய்ப்புகளை உருவாக்கி, வெற்றி கொள்ள வேண்டும். எதிரிகளின் உத்தி என்பது, அரசு திட்டமிட்டு செய்யும் செயசிக்குறு உத்தி போன்றதுதான். அதை சமூக இயக்கங்களைக் கட்டி கொரில்லாத் தாக்குதல் நடத்தி, எளிதில் வெற்றி கொள்ளலாம். எங்கெங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ, அங்கெல்லாம் அடிக்கவேண்டும்.

எதிரியால் பெரிதாக ஒன்றும் செய்யமுடியாது. ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க சட்டம் அனுமதிக்கும். ஆனால், சட்டத்தை மீறாத சமூக செயல்பாடுகளை அவர்களால் வேடிக்கைதான் பார்க்கமுடியும். நாம் அரசை இழக்கலாம், நிலத்தை இழக்கலாம், ஆனால் அடையாளத்தையும், பிறப்பு விகிதத்திலும் வெற்றி கொண்டால் வாய்ப்பு கிடைக்கும் பொழுது நிலத்தையும், அரசையும் உருவாக்கி விடலாம். உலக ஒழுங்கு என்பது நிலையானது அல்ல, அவ்வப்பொழுது உலகு ஒழுங்கில் மறுசீரமைப்பு நடக்கும். அப்பொழுது வாய்ப்பைப் பயன்படுத்தி வெற்றி கொள்ளலாம்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பொழுது, உலக ஒழுங்கில் மறுசீரமைப்பு ஏற்பட்டு, உலகில் பலநாடுகள் தோன்றின. அப்பொழுது தமிழினம் தூங்கியதனால்தான் இன்று இவ்வளவு அவலமும். இனி ஒரு நூற்றாண்டுக்குள் மீண்டும் வாய்ப்பு ஏற்படலாம். அதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். இந்த தமிழ்த்தேசிய பரிணாம உத்தியை படம்-5 -இல் காணலாம்.




உதாரணமாக யூதர்கள் அடையாளம், பிறப்பு விகிதம், சமூக அமைப்புகளை


ஒன்றிணைவோம்! உதவுவோம்! மகிழ்வோம்!
வணக்கம்
ஐரோப்பா
நெஞ்சம் மறக்குமா...!
01.01.20
15.00 Uhr
ஸாரங்காஸ்
இசைக்குழு
200 க்கும் மேற்பட்ட தாயகக் கலைஞர்கள் ஒரே மேடையில்
இசை, நடனம், நகைச்சுவை மற்றும் பல...
Sall Bezay Saraz
Delux Burgweg 16-22
44145 Dortmund
0151 6672 0445
0152 1439 6095
0151 1761 5878
0163 2650 218

மட்டுமே கொண்டு 2000 ஆண்டுகள் அழியாமல் தாக்குப் பிடித்தார்கள். அவர்களுக்கு அரசோ, நிலமோ இல்லை. பின்பு இரண்டாம் உலகப்போர் அளித்த வாய்ப்பில் தனி நாட்டை அடைந்தனர். அடையாளத்தையும், மக்கள் தொகையும் காத்து விட்டால், நாட்டையும், அரசையும் உருவாக்குவதற்கு நேரம் மட்டுமே தேவை. அவர்களால் எவ்வாறு அடையாளத்தைக் காக்க முடிந்தது? என்று பார்த்தால், அடிப்படையில் அவர்கள் சமூக இயக்கங்களைக் கொண்டு கொரில்லா முறையில் அதிக வாய்ப்புகளை உருவாக்கியத்தினால்தான்.

உலக அரசுகள் எவ்வளவோ திட்டமிட்டு பல இனப்படு கொலைகளைச் செய்தும், அவர்களால் அழிக்க முடியவில்லை. அதேநேரம் யூதர்களை அழிக்க முனைந்த பலமான பண்டைய ரோமாபுரி, எகிப்திய அரசுகள் இன்று இல்லை. இதற்குக் காரணம் அவர்கள் அடையாளத்தைக் காப்பதற்கு அரசை நம்பி இருந்தனர். அரசு அழிந்தவுடன் அவர்கள் அழிந்தனர்.

மொத்தத்தில் இன்றைய சூழலிலும் நம்மால் பல வெற்றிகளைப் பெற முடியும். அதற்கு அடிப்படையாக “சிக்கல் அமைப்புகள்” பற்றி அறிவியல் உத்திகளை வகுத்திருக்கிறது. அதுபோன்ற உத்திகளையே புலிகள் போரில் முன்னோடிகளாகப் பயன்படுத்தி, பலவெற்றிகளைக் கண்டனர். அதே உத்திகளை நாம் இன்றை அரசியல் சமூகச் சூழலிலும் பயன்படுத்தி வெற்றி கொள்ளலாம்.

எவ்வாறு வேறுபட்ட சமூக இயக்கங்களை கட்டி எழுப்பி, கொரில்லாத் தாக்குதல் நடத்துவது? என்ற கேள்வி எழும். இதற்கான உத்தியை, குறிப்பாக மூன்று விதிகளை, நாம் ஏற்கனவே பாடம்-2 இல் பார்த்து விட்டோம். விவரத்திற்கு அக்கட்டுரையைப் பார்க்கவும்.

இன்று நாம் செய்யும் பிழை என்னவென்றால், நாம் வெற்றிக்காக ஒரு உத்தியைப் பயன்படுத்துகிறோம் அல்லது தேடிக்கொண்டிருக்கிறோம். அதுபோன்ற ஒரு உத்தி என்பது இல்லை. வேறுபட்ட பல்வேறு உத்திகள்தான் வெற்றியைத் தரும். அதனால் அனைத்து முறைகளும் சரியே!. “நமது மூளையில் ஒரு மோசமான வியாதி உண்டென்றால் அது ‘இதுதான் சரியானது!’, ‘இது தவறானது!’ என்பதுதான்” என்கிறார் ஒரு சீனப் பெரியோர். அனைத்து வேறுபட்ட முரணான உத்திகளும் ஏற்புடையதே!. உத்திகளின், வாய்ப்புகளின் எண்ணிக்கைதான் நமக்கு வெற்றியைத் தருவது. அனைத்தும் ஏற்புடையதே! என்பதே வெற்றிக்கான பாதை.



# இலங்கையே இனி சீனாவின் தளம்



“மொத்த தெற்காசியாவையும் வளைத்துப் போட்டு ஒரு வலுவான கோட்டை கட்ட வேண்டும் என்பது தான் சீனாவின் நீண்டகாலத் திட்டம். அதில் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவைதான் இந்தியப் பெருங்கடலில் சீனாவின் விலை மதிப்பில்லாது முத்துகளாகத் தென்படுகின்றன” என **Booz Allen Hamilton** என்ற பெயரில் உள்ள தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப நிறுவனம், 2005ஆம் ஆண்டளவில் சீனாவின் ஒட்டுமொத்தத் திட்டத்தைத் துவைத்துக்காயப்போட்டது.

இந்தச் செய்தியைக் கேள்வியுற்றதும் அமெரிக்க மற்றும் இந்தியக் கடற்படையில் இந்தத் திட்டத்தின் சாத்தியங்களை ஆராய்ந்தனர். அதற்காக சீனாவிற்கு உள்ள சாத்தியங்களை விட, தமக்கு உள்ள பாதகங்களை ஆராய்ந்து, மாலை தீவுகளைச் சீனா கைப்பற்றினால், அது இந்தியாவைச் சுற்றி வளைத்தது போலாகி விடும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். இதனையடுத்து, 2006 இல் இந்தியா விரைந்து தாக்கும் கப்பலை மாலைதீவிற்குப் பரிசளிக்கிறது.

மாலைதீவின் முக்கியமான 26 தீவுகளுக்கு கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்துவது, இரண்டு உலங்கு






வானூர்திகளை எப்போதும் கண்காணிப்புப் பணிகளுக்கு நிறுத்துவது, இந்திய கடலோரக் காவற் படை மாலைதீவிற்குச் சென்று, அவ்வப்போது பாதுகாப்பை உறுதி செய்வது, மாலைதீவு இராணுவத்தினருக்கு அந்தமான் தீவுகளில் இராணுவப் பயிற்சி அளிப்பது என இந்தியா தன் நிலப் பகுதிகளை பாதுகாப்பது போல மாலைதீவைப் பாதுகாத்தது. அந்த அதீத அன்பிற்கு காரணம் சீனாவிற்கான எதிர்வினையே!.

அதேபோல கடந்த 2009-ம் ஆண்டில் இருந்து இந்தியா மற்றும் மாலைதீவு இணைந்து நடத்தும் ராணுவப் பயிற்சியின் பெயர் ஏக்குவெறின். இந்தியா மற்றும் மாலைதீவு இராணுவத்தினர் இணைந்து தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதுதான் இப்பயிற்சியின் நோக்கமென்று சொல்லப்பட்டாலும், இதுவும் சீனாவிற்கெதிரான ஒரு “கலாட்டா கல்யாணம்” என்றே சொல்லமுடியும். சீன நீர்மூழ்கிகள் அனைத்தையும் அவதானித்தபடி ஆழ்சமுத்திரத்தில் உலாவித்திரிய, நீருக்கு மேலே நின்று, வெறுங்கூத்து ஆடுவதை எவ்வாறுதான் கூறுவது? என்று தெரியவில்லை.

அதற்கும் ஒரு படிமேல் 2013ஆம் ஆண்டளவில் சீனா **“One Belt & One Road Initiative"** என்றொரு புதுவித்தையைக் காட்டத்தொடங்கியது. இது என்ன புதுக்கதை? என்று வாயைப் பிளப்பதற்குள்... உலகச் சந்தைகளை இணைக்க, வணிகம் செழிக்க, அறிவைப் பகிர்ந்து கொள்ள, கலாச்சார பரிமாற்றங்களை வரவேற்க சீனாவின் போக்குவரத்து திட்டம் தான் இந்த **“One Belt & One Road Initiative”** என ஊடகங்கள் முழுவதிலும் அலற வைத்ததில் தெரிந்தது சீனாவின் உத்தி. சீன அரசுப் பத்திரிகையான **“peoples Daily”** இல் பக்கம் பக்கமாக இந்த திட்டத்தின் நன்மைகளை வெவ்வேறு வார்த்தைகளில் எழுதியது. இந்த திட்டத்தின் பெயரைத் தான் 2016-ல் **“Belt & Road Initiative”** என்று மாற்றிக் கொண்டது சீன அரசு.

தெற்காசியாவை வளைத்துப் போடுவதற்கான சீனத் திட்டத்தின் மறைமுகப் பெயரே இதுவென என உலகத்துக்கு நன்கு தெரியும். ஆனால், யார் வந்து மிரட்டினாலும், இது சர்வதேச நன்மைக்கான பாதை என அமெரிக்காவைப் போலவே சீனாவும் நாடகமாடியது. ஆனால், மறைமுகமாக தான் யோசித்து வைத்த திட்டங்களை எல்லாம் முதலீடுகள் மூலமாகவோ அல்லது இராணுவத்தளம் அமைத்தோ தன் கனவுத்திட்டமான முத்துமாலையில் செயல்படுத்தியது. ஆப்பிரிக்காவின் **Djibouti**-ல் தன் இராணுவ முகாமை அமைத்து, இந்தியாவிற்குப் பாடம் புகட்டியது.

திடீரென தொடர்ச்சியான மாலைதீவின் அரசுடனான சந்திப்புகளில் ஆர்வம் காட்டியது சீனா. சீனநாட்டின் முக்கிய கட்சியின் தலைவரான பொலிட் பீரோ வு பங்கோ மாலத் தீவுகளுக்கு எழுந்தருளினார். அவரைத் தொடர்ந்து 2012-ல் லி சங்சுன் வந்து மாலைதீவின் அன்றைய அதிபர் முகமது வகீது கசன் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் 2014 சீன அதிபர் க்சி

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...



திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**



இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

யின்பிங் மாலைதீவின் அதிபரைச் சந்தித்தார்.

தெற்காசியாவை நில வழியில் ஐரோப்பிய நாடுகள் வரை சாலைகளை அமைத்தும், முதலீடுகளின் மூலமாகவோ பிடித்தாகிவிட்டது. இனி கடற்கரை மட்டும் தான் எஞ்சியிருக்கிறது. ஆகவே, கடலை ஆள்வதற்கு முதலில் ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும். அந்த இடம் மாலைதீவுகள். மாலைதீவைக் கைப்பற்றி விட்டால், முக்கியமான நான்கு இடங்களில் இந்தியாவை முழுமையாக முற்றுகை இடலாம். இதற்காகவே சீனா மாலைதீவுகள் மீது அதீத அன்பு காட்டி வந்தது. ஆனால், மாலைதீவின் அரசியல் தலைவர்களில் பலரும் சீனாவுக்கு ஒத்து வரவில்லை.

ஆனால், கடந்த 2013-ல் மாலைதீவின் தலைவராக அப்துல்லா யாமீன் வந்த போது தான் சீனாவுக்கு வசதியானது. மாலை தீவுகளை நல்ல நிலைக்கு கொண்டு வர, அடிப்படைக் கட்டுமானங்கள் தேவை என சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கொடுத்தது சீனா. ஆனால், இன்று மாலைதீவின் மொத்த ஆண்டு வருமதியில், 25 சதவிகித வருமானத்தை சீனாவுக்கு வட்டியாக மட்டுமே கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் மாலைதீவின் முன்னாள் அதிபர் நசீத் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் “மாலைதீவை கடன் மூலம் சூழ்ச்சி வலை விரித்து, தமது வலைக்குள் சீனா வைத்திருக்கிறது. அதிலிருந்து மீளவும் முடியாமல், தனக்கு தோன்றியதைக் கூட செய்ய முடியாமல், மக்களுக்கு நல்லவைகளைக் கூட சீனாவிடம் கேட்டு செய்ய வேண்டிய கட்டாயத்தில் மாலைதீவு அரசு இருக்கிறது” என தன் வருத்தத்தைப் பதிவுசெய்தார்.

மாலைதீவிற்குக் கொடுத்த 1.3 பில்லியன் டொலர் கடனை வைத்து, மறைமுகமாக மிரட்டி சீனா தனக்குத் தேவையானதைச் செய்து வந்தது. அந்த



கடன் பிரச்னையைத் தாமே தீர்ப்பதாகக் கூறிய இந்தியா, ஒரே ஒரு கையெழுத்துடன் சீனாவிற்கான கடனை முடிந்துவிட்டது. இது சீனாவை நேரடியாக வம்புக்கு இழுப்பதற்குச் சமம். இப்போது மாலைதீவு இல்லை என்றாலும், சீனாவுக்கு இலங்கை ஒரு அழுத்தமான இராணுவத் தளமாக இருப்பதை இந்தியா மறக்க வேண்டாம் எனவும் ஆய்வாளர்கள் தங்கள் பயத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இலங்கைக்கு சீனா வழங்கிய 99 பில்லியன் கடனை இந்தியா கொடுக்கவியலாது என்பதோடு, இன்றைய இலங்கையின் ஆட்சியாளர் திரு.கோத்தபாய அவர்கள் எதிர்காலத்தில் தனது குடும்பப் பெயராக, க்சி யின்பிங் என்று மாற்றிக்கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில், இனிவரப் போகும் நாட்களில் இலங்கையே சீனாவின் இரண்டாவது இராணுவத் தளமாக இருக்கப்போகிறது.

மூலம் : **gktoday.com, The guardian, www.boozallen.com**

**PAGEVISION**

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



## Note Books

AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

**Sehr Schnelle Lieferung!**
**Hauslieferungen**
**Vor-Ort Installationen**
**Netzwerklösungen für Firmen**
**Reparaturen aller Marken!**

**günstige gebrauchte Computer**
**Reparaturen aller Marken**

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

**iPhone Reparaturen**

www.iphonefan.ch

சிறுகதை

வண்ணை தெய்வம்

# பிளாக் அன்ட் வைற்

## ஸ்காட்ச் விஸ்க்கி

டிறிங் டிறிங் ... டிறிங் ... டிறிங்...

நேரம் 4-45. காரியாலயம் மூடுவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருக்கின்றது. வழமையாகவே வெள்ளிக் கிழமைகளில் எல்லா அரசாங்கக் காரியாலயங்களும் இப்படித்தான்! ஐந்து மணியாகும் போது பீயோனனைத் தவிர, எல்லோருமே தங்கள் தங்கள் வேலைகளை முடித்துவிட்டுச் சென்றிருப்பார்கள். ஆனால், பாலனுக்கு இது மற்றய வெள்ளிக் கிழமைகளை விட மிகவும் விசேசமானது! காரணம் மூன்று மாதத்திற்குப் பிற்பாடு நான்கு நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து தண்ணியடிப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த நாள்!. வெளிக்கிடுவதற்குத் தயாராக இருந்த அந்த நேரத்தில்தான் ரெலிபோன் மணி அடித்தது.

'யாராக இருக்கும்? தண்ணியடிப்பதற்கு காத்திருக்கும் மற்றய நண்பர்கள் மூவரில் ஒருவராக இருக்குமோ? .. இவ்வளவு அவசரப்படுகின்றார்களே!” என மனதுக்குள் திட்டியபடி றிசீவரை எடுத்து 'லோ பாலன் ஹயர்!”



'யாரு? பாலுத் தம்பியா? நான் பிரான்ஸிலை இருக்கிற சறோவின் மாமா கோபாலசிங்கம் பேசுறன்”.

“கோ... கோ... கோபல...!”. அப்படியொரு மாமா பிரான்ஸிலை இருப்பதாக மனைவி சறோ எப்பவோ சொன்னதாக ஞாபகம்.

“ஆ... ஆ.. கோபால் மாமாவா? தெரியுது! குரல் கிட்ட இருந்து கதைக்கிற மாதிரிக் கேக்குது! எங்கையிருந்து பேசிறியள்?” கீறல் விழுந்த கிறாமப்போன் தட்டில் இருந்து வந்த சத்தம்போல் விக்கி விக்கி வந்தது பாலனின் குரல்.

'நான் கொழும்பிலை எயாபோட்டிலை இருந்துதான் பேசுறன். ஆறு மாசத்துக்கு முன்னம் சறோவின்ர கல்யாணத்திற்கு வர்றதுக்காக இலங்கைக்கு வெளிக்கிட்ட பயணம் இப்பத்தான் சரி வந்திருக்கு. வர்ற நேரத்திலை சொல்லுவம் எண்டு யாழ்ப்பாணத்துக்கு உங்க வீட்டுக்கு எடுத்தா நீங்கள் கொழும்பிலைதான் இருக்கிறதா சறோதான் சொல்லி உங்க நம்பரும் விலாசமும் தந்தது. இன்னும் கொஞ்ச நேரத்திலை நான் உங்க வீட்டை வந்திடுவன்.”

'ஐயோ மாமா! சறோ வீட்டிலை இல்லை. அவ யாழ்ப்பாணம் போயிட்டா!”.

'தெரியும் தம்பி, சறோ சொல்லீட்டா தான் யாழ்ப் பாணத்திலை தான் நிக்கிறதா. தம்பி நான் இண்டைக்கு இரவு உங்களோடை தங்கி இருந்திட்டு, நாளைக்கு யாழ்ப்பாணம் போகலாம். நீங்க வீட்டிலை இருங்க தம்பி உடனை வந்திடுறன்”

'நான் இப்ப கந்தோர்லை நிக்கிறன். வீட்டை வர இன்னம் நாப்பது நிமிசமாவது ஆகும்.”

'அதுக்கென்ன பரவாயில்லை. நான் முன்னதா வந்தா வீட்டு வாசல்லேயே நிக்கிறன். நீங்க நிதானமா வாங்க தம்பி!”.

போனைக் கட் செய்ததும் எரிச்சலாக

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

# மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

## தமிழனின் வரலாற்றில் மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



## இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச் சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

**“விலை அல்ல** எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
**தரம் மட்டுமே!** நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

இருந்தது பாலனுக்கு. 'வீட்டுக்கு வர்றவர் அதுவும் வெளிநாட்டிலை இருந்து வாறவர்! முன்னமே அறிவிச்சிட்டு வரக்கூடாதா? கொஞ்சமாவது நாகரிகம் வேண்டாம்!!".

போன் செய்து நண்பன் மாறனைத் தொடர்பு கொண்டான். 'இண்ணைக்கு புரோக்கிராம் கான்சல். எதுவும் வாங்க வேண்டாம்".

'என்ன வாங்க வேண்டாமா? இவ்வளவு நேரமும் வாங்காமல் இருப்போமா? இரண்டு போத்தல் வாங்கியாச்சு! அதுவும் பாரின் சரக்கு. பிளாக் அன்ட வைற். சைற் டிஸ்க்கிக்கு செல்வம் முனியாண்டி விலாசிலை கோழிக் குறுமா கட்டியாறனெண்டு சொல்லியிருக்கான். இரவுச் சாப்பாட்டிற்கு ராகவன் மட்டன் புரியாணி கட்டியாறதச் சொல்லியிருக்கான். நீ இப்ப போய்க் கான்சல் எண்டு சொன்னா எப்பிடிடா?"

'மனிசின்ரை மாமா ஒருத்தர் பிரான்சிலை இருந்து வந்திருக்கார்டா!" பாலன் இழுத்து இழுத்துச் சொன்னான்.

'மனிசிதான் வீட்டிலை இல்லையே! எதையாவது சொல்லிக் கழட்டி விடு மச்சான்."

'அதெல்லாம் சொல்லிப் பாத்திட்டன். மனுசன் இண்டைக்கு ராத்திரி வீட்டை தங்கீற்று நாளைக்கு யாழ்ப்பாணம் போறதாச் சொல்றாற்ரா!"

'எவ்வளவு நாட்களுக்கப்புறம் தண்ணியடிக்கலாம் எண்டு நாலுபேரும் சேர்ந்து பிளான் பண்ணின பாட்டிதா இது".

'வைஃப் யாழ்ப்பாணம் போறதெண்டு சொன்னதாலை பார்ட்டியை எங்க வீட்டிலேயே வைச்சுக்கலாம் எண்டு நான்தான் சொன்னன். ஆனா நந்தி மாதிரி திடீரெண்டு இந்தாள் வந்து நிக்கிறாரே! என்ன செய்ய?".

'அது சரி, சரக்கு வாங்கியாச்சே?"

'அதை பத்திரமா வைச்சிரு. இன்னொரு நாள் பிளான் பண்ணலாம்".

'உனக்காக எல்லாம் போட்ட பிளானை நிப்பாட்டேலாது. நாங்க மூண்டு பேரும் பார்ட்டியை நடத்திறம். முடிஞ்சா வரப்பார்" பதிலுக்குக் காத்திருக்காது ரெலிபோனைக் கட் பண்ணிவிட்டான் மாறன்.

பாலனின் கோமமெல்லாம் இப்பொழுது மனைவி சறோ மீது திரும்பியது. உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு ரெலிபோன்




எடுத்தான். மறுமுனையில் சறோவே றிசீவரை எடுத்தாள்.

'என்னங்க... மாமா பிரான்சிலை இருந்து வந்திருக்கிறார். வீட்டுக்கு வருவார். நான் இல்லையெண்டு சும்மா இருந்திடாதீங்க. ஹோட்டல்லையாவது சாப்பாடு எடுத்து வடிவாக் கவனியுங்க". பாலன் என்ன செய்ய வேண்டும்? என்பதை பட்டியலிட்டாள் சறோ.

'ஏண்டி பிரான்ஸிலை இருந்து வாற உன்ரை மாமாக்கு, ஒரு டீசென்ஸ் தெரிய வேண்டாமா? வெளிக்கிடேக்கே ரெலிபோன் பண்ணினா என்வாம்!".

'ஏன் உங்களுக்குச் சொந்தமே இல்லாதவங்களெல்லாம் கொழும்புக்கு எந்த அலுவலா வந்தாலும், எங்க வீட்டைதானே வந்து தங்குவாங்க. அப்பவெல்லாம் உங்களுக்கு சொல்லிப் போட்டுத்தான்; வந்தாங்களா? என் மாமா சொல்லாம வந்ததுதான் தப்பா?" சறோவின் குரலில் கொஞ்சம் கோபம் தெரிந்தது.

'நான் என்ன சொல்ல, இவள் என்ன சொல்லுறாள்" மனதுக்குள் புறுபுறுத்தான் பாலன்.

'என்ன சத்தத்தைக் காணம்?".

'இல்லடி எனக்கு வேறையொரு புறோக்கிறாம் இருக்கு. அதுதான்..."

'என்ன புறோக்கிராம்?"

'அது...அது.. என்னோடை வேலை செய்யிற பிறெண்டின்ரை பிள்ளையோடை பேத்டே. அதுதான்..."

'என்னங்க பிரான்சிலை இருந்து வாற மாமாவைவிட பிறெண்டு முக்கியமா?"


அகரம்

விளம்பரத் தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11


'முக்கியமெண்டு இல்லை..." இதுக்கு மேல் கதைத்தால் அவர்களுக்குள் சண்டையாகிவிடும் என்பதால் பாலன் எதுவும் கதைக்கவில்லை.

'அப்புறம் அவர் வெளிநாட்டிலை இருந்து வர்றவர். நம்ம வீட்டைப் பாத்துத்தான் நம்மளையும் எடை போடுவார். அவர் வர்றதுக்கு முன்னமே வீட்டுக்குப் போய், வீட்டை கிளீன் பண்ணி வச்சிடுங்க!, உங்க சிகரெட் வாடை இல்லாம ஸ்ப்ரே அடியுங்கஞ், உங்கடை பியர் ரின்களையெல்லாம் மறைச்சு வையுங்க!, நீங்க மருந்துக்கு பனங்கள்ளுக் கூட குடிக்கமாட்டீங்க எண்டு சொல்லி வைச்சிருக்கிறன்! கவனமா பாத்துக்குங்க." சறோ போனைக் கட் பண்ணி விட்டாள்.




'எனக்குக் கடவுள் தலையிலை எழுதி வைச்சிட்டான், இண்டைக்கு தண்ணிணடிக்கக் கூடாது எண்டு" என மனதுக்குள் புழுங்கியபடி பாலன் வீட்டுக்கு வந்தபோது, வாசலில் பிரான்ஸ் மாமா இல்லை! 'வரும்போது வந்து தொலையட்டும்" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் வந்தவன், வீட்டைக் கொஞ்சம் ஒழுங்கு படுத்திவிட்டு ஹாலில் ரி.வி பார்த்துக் கொண்டிருந்த போது ஹாலிங் பெல் அடித்தது. கதவைத்




திறந்தால் எதிர்பார்த்த படியே பிரான்ஸ் மாமா!.

'வாங்க மாமா!”

'தம்பி நான் சறோவிற்குத்தான் மாமா. உங்களுக்குச் சித்தப்பா முறை.” பெரிய ஜோக் ஒன்றைச் சொன்னது போல பெரிதாகச் சிரித்தார்.

மனதிற்குள் முறைத்தபடி 'உள்ள வாங்க சித்தப்பா!” என்று சொல்லியபடி அவரின் சூட்கேசை வாங்கிப் பக்கமாக வைத்தான். அதற்குப் பக்கத்திலேயே தனது தோளில் இருந்த ரவலிங் பாக்கை வைத்த கோபால் மாமா, வீட்டைச் சுத்தி ஒரு நோட்டம் விட்டார்.

'பரவாயில்லையே! சறோ வீட்டிலை இல்லாட்டியும் வெள்ளைக்காறன் மாதிரி வீட்டை நல்லா நீற்றா வைச்சிருக்கிறியள்”. பாராட்டுப் பத்திரம் வாசித்தார்.

பாலனின் நினைவெல்லாம் நண்பர்களையே சுற்றிச் சுற்றிச் சென்றது. 'இப்ப ஒரு போத்திலை முடிச்சிருப்பாங்கள்...”

'என்ன மாப்பிளை? ஏதோ யோசினையிலை இருக்கிற மாதிரித் தெரியுது”.

'அது நீங்க ரெலிபோன் பண்ணினதும் அவசரத்திலை வந்ததாலை கந்தோர் நினைவு...”.

'மாப்பிளை வேலையைப் பற்றி வீட்டிலை யோசிக்கக்கூடாது. வேலை செய்யேக்கை இறுக்கமாய் இருக்கிற மூளை, வீட்டை வந்தவுடனை பிரியாகி, சந்தோசமாய் இருக்கவேணும். அப்பிடி வாழ்றதாலைதான் வெள்ளைக்காரன் சந்தோசமாய் வாழ்றான்” பாலனுக்கு பாடம் எடுத்தார் பிரான்ஸ் மாமா.

நான் எத்தினை நாள் பிளான் பண்ணி, இண்டைக்கு சந்தோசமாய் இருக்க எவ்வளவு ஏற்பாடெல்லாம் செய்து வைச்சிருந்தன். எல்லாத்தையும் குழுப்பிப் போட்டு, சந்தோசமாய் இருக்கிறது எப்பிடியெண்டு அட்வைஸ் பண்ணுறாராம். மனதுக்குள் புறுபுறுத்துக் கொண்ட பாலன் அதைக் காட்டிக் கொள்ளாமலேயே 'சறோ இல்லாததாலை சமையலும் இல்லை... வாங்க ஹோட்டலுக்குப் போய் டின்னர் சாப்பிட்டு வருவம்” என்றான்.




'ஹோட்டல் எல்லாம் வேண்டாம் தம்பி. சறோ இல்லையெண்டதுமே நான் வர்ற வழியிலையிலேயே ரெண்டு பேருக்கும் மட்டன் பிரியாணி வாங்கிட்டு வந்திட்டேன்”.

'மட்டன் பிரியாணியா?”

'பிரியாணி மட்டுமில்லை! சைற் டிஸ்க்கிற்கு கோழிக் குறுமாவும் வாங்கியந்திருக்கிறேன்.”

'கோழிக் குறுமாவா?”

'அப்ப! பிரான்ஸிலை இருந்து வாறன். சும்மாவா வருவன்” தனது டிராவலிங் பாக்கைத் திறந்து எடுத்தார் ஒரு லிற்றர் பிளாக் அன்ட வைற் முழுசிக் கொண்டு நின்றது.

'பிளாக் அன்ட் வைற்றா?”

'நான் பிரான்சிலை இருந்து வாறன். உந்த போலி மரியாதை ஒண்டும் வேண்டாம் மாப்பிள்ளை. சறோவும் இல்லை வசதியாப் போச்சு! ரண்டு பேரும் இண்டைக்கு சந்தோசமா இருப்பம்”.

பாலா நீ இண்டைக்கு தண்ணியடிக்க வேணுமெண்டு உன்ரை தலையிலை கடவுள் எழுதி வைச்சிருக்கடா! என்று பாலனின் மனம் குதூகலித்தது!

பிளாக் அன் வைற்றைத் திறந்து ரண்டு கிளாசிற்குள்ளும் அளவாவக கோபால் மாமா விட அதற்குள் ஐஸ் கட்டிகளைப் போட்டுக் கொண்டிருந்தான் பாலன்.


CENTURY
TRAVELS GMBH
Sommer 2020
Frankfurt-München
Colombo
inklusive
Steuern und
Gebühren
ab 599€
Buchen Sie schnell und
Sichern Sie Ihre Platz
Rheinische Strasse 29
44137 Dortmund
Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149

# Radio - by - Phone

## வாசகர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகள்

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்

**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15 YEARS ANNIVERSARY

மேலதிக விபரங்களுக்கு... **www.etr.fm**